# இந்தியால் தமிழ் கெடும்

ஆசிரியர் :

தமிழ்ப் புலவர், பு. செல்வராஜன்
(உதவி ஆசிரியர், "தாருல் இஸ்லாம்")

வெளியிடுவோர் :
மிராஸ் அண்டு கம்பெனி,
புத்தக வியாபாரிகள்
16, திருப்பள்ளித் தெரு, சென்னை.

பதிப்புரிமை] [விலை அணா 2.

# தமிழர்க்கு வேண்டுகோள்

தமிழைத் தாய் மொழியாகக் கொண்டுள்ள தமிழர் அனைவரும், இயக்க வேறுபாடு எள்ளளவும் இன்றி, இந்நூலை நடுநிலையில் நின்று படிக்கும்படி வேண்டுகிறோம். தாயைத் துறப்பவன் தமிழன் அல்லன்; தாயை இகழ்பவனும் தமிழன் அல்லன்; வேறொருத்தியால் தன் தாயைக் கெடுப்பவனும் தமிழன் அல்லன். தமிழே நம் உயிர்; கட்சி, இரண்டாவதோ மூன்றாவதோ இருக்கட்டும். தமிழர் எக் கட்சியினர் ஆயினும், 'தமிழர்—தமிழரே' அல்லவா?

ஆக்கியோன்.

# "தமிழர் முழக்கம்"

1. தமிழனே! ஒருகால் இந்தியா முழுதும்
தனித்ததோர் அரசுநீ செய்தாய்!
தமிழனே! பாழும் வடமொழி வந்துநின்
தாய்மொழி அழித்தது வடக்கே;
தமிழனே! பின்னர் வடமொழி யால்தமிழ்
தெலுங்குகன் னடமலே யாளம்
தமிழனே! ஆன சரிதம்நீ அறியாய்;
தெரிந்திடில் உன்மனம் கொதிக்கும்.

2. உன்னத நிலேயில் இருந்தநம் தமிழ்தான்
வரவர எல்லேயிற் சுருங்கி,
இன்றுள பத்துஜில் லாக்களில் வாழும்
இழிநிலே உற்றதைக் காணுய்;
அன்ருெரு வடமொழி இந்திய நாட்டில்
ஆதிக்கம் பெற்றதால் அன்ருே?
இன்ருெரு இந்தியும் வந்திடில், உன்தமிழ்
எக்கதி எய்திடும் எண்ணுய்.

3. தோமறு தொல்காப் பியமுதல் இன்றே
தோன்றிடும் தமிழ்நூல் அளவும்
நாமுரை வடசொல் வரவர வளர்ந்தே
நூற்றினுக் கறுபதென் ருன;
சாமுறை தமிழினுக் கிதனினும் வேறென்?
சாற்றுவீர் நடுநிலே அறிவீர்!
தோமுடை இந்திகட் டாயமாய் நுழைத்தால்,
தொலேந்தது தமிழ்எனல் மிகையோ?

4. வடமொழி யால்தமிழ் கெட்டதே அன்றிநம்
வழக்கமும் பழக்கமும் ஒழிந்த;
வடமொழி யால்தமிழ் நாட்டினில் ஜாதிகள்
வந்தன தமிழரைப் பிரித்த; [னில்
வடமொழி யேதமிழ் மணத்தினில் பிணத்தி
வீட்டினில் கோயிலில் குளத்தில்—
மடத்தன மாக ஈதுண ராமல்
'தமிழ்வளர் கிறதெ'னல் முறையோ?

(இந்த நிலைமையில்)

5. தமிழினை வளர்த்தல் தமிழர்தம் கடனே?
இந்தியை நுழைத்திடல் கடனே?
'தமிழரே! நாமும்' எனவுரை பகரும்
தறுக்குடை அமைச்சரே! சொல்வீர்!
'தமிழரே நாமும்' என்றுமார் அடிக்கும்
தினமணி! தமிழ்மணி! செப்பீர்!
'தமிழரே! நாமும்' என்றுவால் தூக்கும்
குரங்கிதழ் கிறுக்குவோர்! கூறீர்!

6. தூங்கினேன் தொடையில் திரித்தது கயி
றெண்ணிய காலமும் போச்சே! [றென்
பாங்குறு தமிழனுக் காண்மையும் வீரமும்
பழையன என்பதை உணர்வீர்:
யாங்கொளும் 'பெரியார்' எதற்குமே அஞ்சார்;
யாமவர் தமிழ்ப்படை வீரர்;
தேங்கரும் பமிழ்தாம் இவற்றினும் சுவை
தீந்தமிழ் எம்முடை உயிரே! [தரும்

—பு. செல்வராஜன்

# சம்ஸ்கிருதத்தால் சிதறுண்ட திராவிட மொழிகள்




## திராவிட மொழிகள்:

A. 1. துடா 2. கோடா 3. கோண்ட் 4. கூ
5. ஒராயான் 6. இராஜ் மஹால்

B. 1. தமிழ் 2. தெலுங்கு 3. கன்னடம் 4. மலையாளம்
5. துளு 6. குடகு.

பலூசிஸ்தானத்தில் இருப்பது: ப்ராஹுி

# இந்தியால் தமிழ் கெடும்

## I. தமிழும் வடமொழியும்

'தமிழ்' என்னும் சொல் 'தமிழ் நாடு', 'தமிழ் மக்கள்' என்னும் பொருள்களில் வழங்கி வந்ததென்பது புறநானூற்ருல் அறிகிறோம்.[1] எனவே தமிழ்—'மொழி, நாடு, மக்கள்' என்னும் முப்பொருள்களில் வழங்கி வந்ததெனல் வெளியாம். 'மக்கள்' என்னும் பொருளில் வரவே, 'மக்களது நாகரிகம்' என்பதையும் 'தமிழ்' என்னும் சொல் குறித்ததாகல் வேண்டும். எனவே, 'தமிழ் வாழ்க' எனின்—'தமிழ் நாடு வாழ்க, தமிழர் வாழ்க, தமிழ் மொழி வாழ்க, தமிழ் நாகரிகம் வாழ்க!' என்பது விரிந்த பொருளாகும். இப்பொருட் சிறப்பு இந்தியாவில் வேறு எம்மொழிக்கும் இருப்பதாகத் தெரியவில்லை.

"இத்தமிழே திராவிட மொழியினது தூய தன்மையை இன்றளவும் பெற்றிருப்பது. ஏனைய தெலுங்கு முதலியவை வடமொழியால் பெரிதும் மாறிவிட்டன; ஆனல் மாறுதல் இல்லாது பழைய திராவிட நிலையில் இருப்பது தமிழ் ஒன்றே. அது ரிக்வேத காலத்துக்கும் முற்பட்டது. அதனாற்ருன், ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும் சந்தர்ப்பங்களில் எல்லாம் தமிழையே எடுத்துக்கொள்ளல் ஆராய்ச்சியாளர் வழக்கம். இத்திராவிடம் ஆரியர்க்கு முன் இந்தியா முழுவதும் பரவி இருந்ததாகும்."[2]

---

1. Vide புறம், S. 19, 168, 198.
2. Vide 'Pre-Aryan & Pre-Dravidian in India'-p. 35, 36, 38, 39.

[இந்தியா முழுவதும் இருந்த தமிழ் இப்போதுள்ள நிலையில் உள்ள தமிழன்று. இப்போழ்துள்ள சங்க நூல் தமிழ், 'செந்தமிழ்' (செப்பஞ் செய்யப்பட்ட தமிழ்) ஆகும். அதற்கு முற்பட்ட பழைய (தெலுங்கு, கன்னடம், கோண்ட் முதலிய திராவிட மொழிகள் பிரியாத முன் இருந்த) தமிழே இந்தியா முழுவதும் பரவி இருந்ததென்பது நினைவில் கொள்ளற்பாலது.]

இத்துணைச் சிறப்பு வாய்ந்த தமிழ்மொழி, ஆரியமாகிய வடமொழி வருமுன் (கி. மு. 3000-க்கு முன்) இந்தியா முழுவதும் பரவி இருந்ததென்பது மொழி ஆராய்ச்சி வல்லாரும் சரித்திர வல்லாரும் அழுத்தமாகக் கொண்டுள்ள—நிரூபித்துள்ள உண்மை ஆகும். இவ்வுண்மையைப் பல கட்டுரைகள் வாயிலாகப் பேரறிஞர் பலரும் விளக்கி உள்ளார்கள் ; ஆண்டுக் காண்க.[1]

ஒரு மொழி பிறிதொரு மொழியோடு கலப்புறுங்கால் இரண்டு மொழிகளின் உச்சரிப்பு முறை மாறும்; இதனுல் அவ்விரு மொழிகளும் கெடும். முன்னர்ப் பழக்கம் அற்ற மக்கள் புதிய மொழியைப் பேசுங்கால் உண்டாகும் மாறுதல்கள் அனைத்தும் உண்டாதல் இயல்பே. இதனை நேர் முகமாக இன்று ஆங்கிலத்திற் காணலாகும். தமிழர், புதிய மொழியாகிய ஆங்கிலத்தைப் படித்தும் படியாமலும் உச்சரிக்கையில் எத்துணைத் தவறுகள் நேர்கின்றன என்பதை அனைவரும் அறிந்திருக்கின்றனர். நாம் ஆங்கிலத்தில் எத்துணைப் படித்தவராயினும், பிழையின்றிப் பேசினும், வெள்ளையன் நம்மை மதிப்பதில்லை என்பதும் நாம் நன்கறிந்ததே. ஓர் ஆங்கிலேயன் எத்துணை அரும்பாடுபட்டுத் தமிழிற்

1. Vide கரந்தைக் கட்டுரை, 'தமிழின் தொன்மை', Origin & Development of the B. L. by S. K. Chatterji p. 41—45.

பேசினும், அவன் உச்சரிப்பு முறை எவ்வளவு கேடாக இருக்கிறது! காரணம் என்னே? நாடு, மொழி, உச்சரிப்பு முறை இவை முற்றும் வேருக இருத்தலே காரணம் ஆகும்.

முதலில் சிறு பகுதியினராக இந்தியா வந்த ஆரியர்க்கும் பெரும் பகுதியினராக இந்தியாவில் இருந்த திராவிடர்க்கும் போர், கூட்டுறவு போன்றவை உண்டான போழ்து, இரு மொழிகளும் கலந்தன. அக்கலப்பால் திராவிடர் ஆரியம் பேசலாயினர்; அதனல், அதன் தூய தன்மை, உச்சரிப்பு முறை முதலியன கெட்டன; தமிழ்ச் சொற்கள் பல ரிக் வேதத்திலேயே இடம்பெற்றன; முண்டாமொழிச் சொற்கள் பலவும் வேதங்களில் நுழைந்தன. திராவிடர்க்கே உரிய சிறப்பான கொள்கைகள் பல, வேதங்களிலும் சம் ஹிதைகளிலும் இடம் பெற்றன. பிற்காலங்களில் தமிழ் வீரக் கடவுளாகிய 'முருகன்' சுப்பிரமணியனுக வடநூல் களில் இடம் பெற்ருன்.[1]

இவ்வாறு இருமொழியாளர் கலப்பால் உண்டான கேடுகள் பலவாகும்: இக்கலப்பால் திராவிடமொழி வட இந்தியாவில் நாளடைவில் கெட்டுவிட்டது. 150 ஆண்டுகட் குள் தமிழ், ஆங்கிலத்தின் கூட்டுறவால் கெட்டுள்ளதைவிடப் பன்மடங்கு கேடு அக்காலத் திராவிடம் வட இந்தியாவில் கெட்டது. இன்று தமிழராய நாம், ஒரு வாக்கியமேனும் தமிழில் பேசுகிரேமா? 'என்ன சார், ட்ரெயின் எப்போ அறைவல்?' என்றுதானே பேசுகின்ரேம். 'என்ன ஐயா, வண்டி எப்பொழுது வரும்?' என்று கேட்க நாம் அறிவழிந் திருக்கிரேம் அல்லவா? 150 ஆண்டுகட்குள் இக்கேடாயின், 2000 ஆண்டுகட்குள், வட இந்தியாவில் பண்டைத் திராவிடம் வடமொழியால் கேடுற்றதைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ?

1. Dravidian India, by T. R. Sesha Iyengar. p. 96, 97.

இக்கேட்டால் தமிழும் கெட்டது; வடமொழியும் (ரிக் வேத வடமொழியே) கெட்டது; நாளடைவில் உச்சரிப்புக் கெட்டு, பொருள் கெட்டுத் தமிழ், வடமொழியின் தொடர்பால் தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய பல மொழிகளாக மாறினாற் போல—வடமொழி பிராக்ருத மொழிகளாக மாறின. அவற்றுள் ஒன்றே கி. மு. 6-ம் நூற்றாண்டில் புத்தர் பேசிய 'பாலி' பாஷை. பௌத்தமத போதனை இப்பாலி மொழியிற்றான் நடைபெற்றது. பெரும்பாலும் இப்பிராக்ருதச் சொற்களே சிதைந்து இன்று தமிழ் நூல்களில் இடம் பெற்றுள்ள வடமொழிச் சொற்கள் ஆகும். இவை நேரான சம்ஸ்கிருதச் சொற்கள் அல்ல. 'இது பாகதச் சிதைவு' என உரையாசிரியர் ஆங்காங்குக் கூறிப்போதலே இதற்குச் சான்றாகும். பிராக்ருதம் வட இந்தியாவில் வழங்கப்பெற்ற காலத்திற்றான் வடநாட்டினர் தமிழகத்தில் நுழைந்தனர். புத்தருக்குப் பின்னர் அலெக்ஸாண்டர் படையெடுப்பு உண்டானது; கிரேக்கர், பாரசீகர், ஆப்கானியர், மங்கோலியர், துரானியர், ஹூணர் முதலிய பல்வேறு வட—வடமேற்கு நாடுகளைச் சேர்ந்த மொழிகளைப் பேசும்—பல்வேறு நாகரிக முறைகளைக்கொண்ட மக்கள் வட இந்தியாவிற் புகுந்தனர்; அவர்கள் மொழிகள் பிராக்ருத மொழிகளோடு கலப்புண்டன; நாகரிக முறைகள் கலந்தன. இவற்றின் பயனாகப் பிராக்ருத மொழிகளும் கெட்டு, இன்று வட இந்திய மாகாணங்களில் பேசப்படும் 'இந்திய—ஆரிய மொழிகள்' ஆகத் தோற்றம் எடுத்தன. எனவே, இம்மொழி மாற்றங்களை எதிரே காணுமாறு குறிக்கலாம்:

பண்டை இந்திய மொழிகள்

↑

திராவிடம் ↓ ↓ முண்டா

(1) பிறகு கலப்புண்டவை

திராவிடம் ↓ வடமொழி ↓ முண்டா ↓

(2) இம்மூன்றின் கலப்பால் தோன்றியவை

↓

பிராக்ருத மொழிகள் (அவற்றுள் 'பாலி' ஒன்று)

↑

(3) பிராக்ருத மொழிகள் + கிரீக், ஆப்கன், பெர்ஷியன், மங்கோலியன், ஹூணர் மொழி முதலியவை

↓

இவற்றால் பிறந்திருப்பவை :

1. பஞ்சாபி. 2. சிந்தி. 3. இந்தி 4. வங்காளி.
5. ஒரியா. 6. மாரத்தி. 7. குஜராத்தி. 8. பீஹாரி.
9. அஸ்ஸாமி முதலியன.

இவ்வாறு (1) திராவிடம், முண்டா இவற்றோடு சம்ஸ்கிருதம் கலந்ததால், (2) பிராக்ருத மொழிகள் தோன்றின. அவை, படையெடுத்து வந்த பன்னாட்டார் மொழித் தொடர்பால் (3) இந்திய - ஆரிய மொழிகளாக மறு பிறவி எடுத்தன. இவ்வுண்மையாற்றான், மேற்கூறிய பஞ்சாபி, வங்காளி முதலிய மொழிகளில் திராவிட முண்டாக் கலப்பு இன்றும் காணப்படுகிறது என்று அவ்வம்மொழி ஆராய்ச்சியாளர் அறைந்துள்ளனர்.[1] "வட இந்தியாவில் இருந்த தமிழே சம்ஸ்கிருதக் கலப்பால் இப்போதுள்ள வடஇந்திய மொழிகளாக மாறின" என்று கூறுவாறும் உளர்.[2]

இங்ஙனம் வட இந்தியாவில் பெருமாறுதல்கள் ஏற்பட்டமையாற்றான், அங்கிருந்த திராவிடமும் முண்டா மொழிகளும் சிதைந்து, இன்று ஒரு சில மலைப்பிரதேசங்களைப் புகவிடமாகக் கொண்டிருக்கின்றன. ஏறக்குறைய 5000 ஆண்டுகளாக வட இந்தியாவில் பல மொழிகள் புகுந்து, பல படையெடுப்புகள் தோன்றி, நாடு அல்லற்பட்டமையாற்றான் அங்கிருந்த பண்டைமொழிகள், பண்டை நாகரிகம் இவை முற்றும் மாறிவிட்டன. மத்திய மாகாணம், ஒரிஸ்ஸா, வங்காளம், பீஹார், அஸ்ஸாம் முதலிய மாகாணங்களில் சில 'முண்டா' மொழிகளும், கோண்ட், கூய், ஒராயான், இராஜ் மஹால், குருக் முதலிய திராவிட மொழிகளும் நூற்றுக்கணக்கான மக்களால் ஒதுக்குப் புறங்களில் இன்றும் பேசப்பட்டு வருகின்றன. கோண்டர் இன்றும் 'பூமிதேவி'யைத் 'தரைப்பெண்'

---

1. Vide Dr. Earnest Trumpp's 'Sindhi Grammar'
   Vide S. K. Chatterji's 'Bengali Language' p. 41—45.
   Vide Dr. Beames's 'Modern Aryan Languages of India' p. 128, 140, 245.
   Vide 'Studies in Dravidian Philology'—p. 29—84.
2. Vide T. R. Sesha Iyengar's 'Dravidian India,' p. 79.

என்றுதாம் கூறுகின்றனர்[1] எனின், அப்பண்டை மக்கள், இத்துணைக் குழப்பங்கட்கும் இடையே, தமிழை எங்ஙனம் பாதுகாத்து வந்துள்ளனர் என்பது நினைந்து மகிழற்பாலது. இத்திராவிட மக்கள் வட இந்தியாவில் இன்றும் இருப்பதே 'தமிழ் வட இந்தியாவிலும் இருந்தது' என்பதை இன்றளவும் நினைப்பூட்டுவதாகும்.[2]

இமய முதல் குமரி வரை பரவிப் பெரும் புகழோடு இருந்தது தமிழ் என்பதைச் சிந்துப் பிரதேச திராவிடர் நாகரிகமும் மெய்ப்பித்துவிட்டது.[3] அங்குக் கிடைத்த எருது முத்திரைகள் திராவிடர்நாகரிகத்தை நன்குணர்த்துவனவாகும். இங்ஙனம் வாழ்ந்த திராவிடர் நகரங்களில் கிடைத்த 'குறிகள்' பல, ஹைதராபாத் சமஸ்தானச் சமாதிகளிலும்[4] நீலகிரிக் கற்பாறைகளிலும் (Dolmens) நெல்வேலியிற் புதையுண்டிருந்த மட்பாண்டங்களிலும் நாணயங்களிலும் காணப்படலால்,[5] அப்பழைய காலத்தில் இந்தியா முழுவதும் ஒரே விதத் திராவிட நாகரிகம் பரவி இருந்தது என்பதை எளிதில் அறியலாம்.[6] இங்ஙனம் வட இந்தியாவில் சிந்துப் பிரதேசத்தில் வாழ்ந்த திராவிடர், 8 இராசிகளைக் கொண்ட இராசி மண்டலத்தைக் கண்டுபிடித்த காலம் சுமார் கி. மு. 5600 ஆண்டுகட்கு முற்பட்டது என ஆராய்ச்சி வல்லார் அறைவர்.[7]

---

1. Thurston's 'Castes and Tribes of Southern India' Vol. iii, p. 372.
2. Caldwell's Comparative Grammar, p. 148, 368, 412.
3. Vide 'Mohenjo—daro and the Indus Civilization'. 3 Vols.
4. Hyderabad Archeological Society Journal, 1917.
5. Mysore Archeological Report, 1935.
6. Vide T. R. S. Iyengar's 'Dravidian India', p. 78, 79.
7. Father Henry Heras's Lectures at Madras & Pudukotta (20,21—10—37)

## II. சம்ஸ்கிருதக் கலப்பால் தெலுங்கு, கன்னடம், மலையாளம் பிறந்தமை

இங்ஙனம் ஈடும் எடுப்பும் அற்ற முறையில் வாழ்ந்த மக்கள் வளர்த்த தமிழ் (திராவிடம்) வட இந்தியாவில் வடமொழி நுழைந்ததும், அடைந்த கேட்டை மேலே விளக்கினோம்; வடமொழி அடைந்த கேட்டையும் விளக்கினோம். இவை மட்டும் அல்ல: பிராக்ருத மொழிகள் தோன்றியவுடனே வட இந்தியாவுக்கு அணித்தாகவுள்ள (இப்போதைய) தெலுங்கு நாடும் கன்னட நாடும் வடமொழி என்னும் வெள்ளத்திற்கு இரை ஆயின. 'ஆந்திரர்' என்ற சொல் 'அயித்ரேய பிராமணம்' என்னும் நூலில் குறிப்பிடப்பட்டு உள்ளமையாலும், ஆதி காவியமாகிய வால்மீகி இராமாயணத்தில் கூறப்பெற்றுள்ளமையாலும், ஏறக்குறைய கி.மு. 1000-ல் (3000 ஆண்டுகட்குமுன்) தமிழ் மொழி (பழைய திராவிடம்) வடமொழியின் கலப்பால் தெலுங்காகவும் கன்னடமாகவும் மாறியது[1] என்பது தெளியலாம். கன்னட மொழி பேசும் முறையிலேயே நடிப்பாளன் ஒருவன் ரோம நாடகம் ஒன்றில் (அதன் காலம் கி. மு. 3-ம் நூற்றாண்டு) காணப்படலாலும், வியாச பாரதம் முதலிய பிற்கால நூல்கள் 'கன்னடர்' எனக் குறிப்பதாலும், ஏறக்குறைய கி. மு. 7-ம் நூற்றாண்டில் செய்யப்பெற்ற தொல்காப்பியம் 'வட வேங்கடம் தென்குமரி' எனத் தமிழகத்து எல்லை கூறலாலும், தெலுங்கு, கன்னடம் இரண்டும் பிறந்த காலம் கி. மு. 1000 என உத்தேசமாகக் கொள்ளலாம். "கடைச் சங்கத்தின் தொடக்கம் கி. மு. 4-ம் நூற்றாண்டாக இருக்கலாம்" என இவ்வாண்டில் மஹா வித்வான் மு. இராகவையங்கார் அவர்

---

1. Vide M. Seshagiri Sastri's 'Andhra Sabdadhvam' & V. G. S. Sastriar's 'History of the Tamil Language', p. 26, (Ed.5.)

கள் முடிவு கொண்டிருத்தல் முறையானது.[1] அப்பண்டைக் காலத்தில் எழுந்த அகநானூற்றுப் பாக்கள் சிலவற்றில் 'வேங்கடத் தும்பர் மொழி பெயர் தேயம்' என வருதலால், வேங்கடமலைக்கு வடக்கே (மொழிவேறுபட்டது) என்பது அறியத் தகும். இவற்றால் மிகப் பழைய காலத்திலேயே தெலுங்கு, கன்னடம் இரண்டும் ஆரியத்தின் ஆட்சிக்கு அடங்கிவிட்டன என்பதும், தமிழ் சிறிது சிறிதாகத் தன் எல்லையை இழந்து வந்தது என்பதும் நன்கு அறியலாம்.

'கேரள பாணினீயம், பாஷா பூஷணம், விருத்த மஞ்சரி' முதலிய நூல்களை மலையாளத்தில் வரைந்துள்ள A. R. இராஜ ராஜ வர்மா எம். ஏ., எம். ஆர். ஏ. எஸ். அவர்கள் 'மலையாள மொழி எப்படி உண்டாயிற்று' என்பதை நன்கு கூறுதல் காண்க:—* "பழைய காலத்தில் தமிழ் எழுத்துக்கள் அல்லாமல், தனக்கெனச் சொந்த எழுத்துக்கள் மலையாள மொழிக்கு இருந்ததில்லை. அக்காலத்தில், மலையாளம் தனித்து நின்று இயங்க முடியவில்லை......குழந்தைப் பருவ மலையாளம் 'ஆதி மலையாளம்' எனலாம். வாலிபப் பருவ மலையாளம் 'பழைய மலையாளம்' எனலாம். இவை இரண்டும் தமிழினின்று மலையாளம் பிரியாத காலத்தன. அக்காலத்துக்கு (கண்ணஸ்ஸ பணிக்கருக்கு)ப் பிறகே இப்போதுள்ள மலையாளம் தோன்றியது. இப்போதுள்ள மலையாளம், பண்டைக்கால நிலையிலிருந்து பெரிதும் மாற்றப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் சம்ஸ்கிருதத்தின் கூட்டுறவே ஆகும். பழைய மலையாளம் வழக்காற்றில் இருந்த பொழுது ஆரியராகிய நம்பூத்ரிமார் கேரள நாட்டில் வந்து வாழ்ந்திருந்தனர்; என்றாலும், இந்நாட்டு மொழியை அவர்கள் போற்றவில்லை. காலப் போக்கில், சம்ஸ்கிருதம் பேசி இருந்த நம்பூத்ரிகளும் பழைய மலையாளம்

1. Vide his article in the Madras University Journal Vol. II, 1937—'38, part II, p. 4.

பேசி வந்த கேரள நாட்டு மக்களும் கலந்து உறவாடிய பிறகே, இருவருடைய மொழிகளும் கலந்து உண்டாகிய ஒரு கலப்பு மொழியாகும் இப்போதைய மலையாள பாஷை''.[1] இதுவரையிலும் கூறியவற்றால், பழைய திராவிட மொழி சம்ஸ்கிருதத்தால் கெட்டுத் தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய புதிய மொழிகளாகப் பிரிந்துவிட்ட உண்மையை நாம் நன்கு அறியலாம். உண்மை இப்படி இருக்க, மீதியுள்ள நமது தமிழையும் கெடுக்க, இருக்கிற சம்ஸ்கிருதம் போதாதென்று, இந்தியையும் (இதில் 100-க்கு 50 வார்த்தைகள் சம்ஸ்கிருதம்) தமிழ் நாட்டில் கட்டாய பாடம் ஆக்குதலால், தமிழ் கெட்டு வேறு மொழியாக மாறுமா? மாறாதா? நீங்களே முடிவு கூறுங்கள். 'பாதிக்குப் பாதி வடமொழி (சமஸ்கிருதம்) கலந்தது இந்தி' என்பர் சுவாமி சுத்தானந்த பாரதியார்.[2]

இதுகாறும் கூறிய மாறுதல்களால், இமயம் முதல் குமரி வரை இருந்த தமிழ் (திராவிடம்), இன்று கிழக்கே வங்கக் கடலையும், மேற்கே மலையாளம் திருவாங்கூர்ச் சீமைகளையும், வடக்கே சென்னையையும், தெற்கே குமரி முனையையும் எல்லைகளாகவுடைய மிகச் சிறிய நிலப்பரப்பு மொழியாக மாறிவிட்டது. இன்றைய தமிழ் நாடு 10 ஜில்லாக்களை உடையது; ஏறக்குறைய $2\frac{1}{4}$ கோடித் தமிழரை உடையது. இதுகாறுங் கூறியவற்றால், இந்தியா முழுவதும் பரவி இருந்த தமிழ், சம்ஸ்கிருதத்தால் அடைந்த கேடுகள் இன்னவை என்பதனையும், அது சம்ஸ்கிருதத்தால் எல்லை சுருங்கி அடைந்துள்ள இழி நிலைமையினையும் நன்கறியலாம். இனி, இவ்வளவு பெரிய நிலப் பரப்பைக் கவர்ந்த வடமொழி, தமிழ் நாட்டில் செய்துள்ள கேடுகளைக் காண்போம்.

---

1. Vide A. R. Rajaraja Varma's 'Basha Svarupam' and 'Sentamil Selvi' Vol. 16, p. 392–394.

2. 'ஹிந்தி அவசியமா!'—சுத்தானந்த பாரதி, ப. 5.

## III. சம்ஸ்கிருதத்தால் தமிழ் மொழி அடைந்த கேடு

ஏறக்குறைய கி. மு. 1000-ல் வடமொழியாளர் (பார்ப்பனர்) தமிழகத்தில் நுழைந்து ஆங்காங்கு அரசர் செல்வாக்குப் பெற்றுத் தனி இடங்களில் (பார்ப்பனச் சேரிகளில்) வசித்து வந்தனர். அவர்கள் இத்தமிழ் நாட்டில் நிலைத்துவிட்டமை தொல்காப்பியத்தால் நன்கறியலாம். அவர்களால் வடமொழி தமிழ் நாட்டில் அப்போது மிகக் குறைந்த அளவில் பரவியதென்னலாம். இன்றேல், அப் பழைய காலத்திலேயே தொல்காப்பியனார்,

"வடசொற் கிளவி வடஎழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே"

எனச் சூத்திரம் செய்யார் அன்றோ? அவர்கள் தங்கட்குள் பயன்படுத்தக் கிரந்த எழுத்துக்களைக் கையாண்டனர். இந் நிலையில் கி. மு. 4-ஆம் நூற்றாண்டில் சமண சமயம் தமிழகத்தில் நுழைந்தது. சமணர் வடமொழியிலும் பிராக்ருத மொழிகளிலும் புலமை பெற்றவர். அவர்கள் முதலில் தமிழகத்து மலைக் குகைகளில் இடம் பெற்றனர். தங்கள் சமயப் பிரசாரத்தின் பொருட்டு அவர்கள் (இப்போழ்து கிறிஸ்தவப் பாதிரிமார் செய்வது போலத்) தமிழ்மொழி கற்றுப் புலவாாயினர்; தமிழ் நூல்களையும் செய்யலாயினர். மதுரை ஜில்லாவில் ஆனைமலைக் குகைகளில் சமண முனிவர்கள் வாழ்ந்தன என்பர் ஆராய்ச்சியாளர். புதுக்கோட்டைச் சீமையிலும் சேலம் முதலிய ஜில்லாக்களில் உள்ள மலைக் குகைகளிலும் இச்சமண முனிவர்கள் வாழ்ந்து வந்தார்கள்; தமிழ் மூலமாகத் தங்கள் சமயக் கொள்கைகளைத் தமிழர்க்குப் போதித்து வந்தனர். சமணம் வடநாட்டு மதம் ஆதலாலும், வடமொழியி

லேயே அம்மதத்துக்குரிய ஆதிநூல்கள் இருந்தமையாலும் அக்கொள்கைகளைத் தமிழர்க்குப் போதிக்கையில் பல வட சொற்கள் வெளிவருதலும் பாவுதலும் இயல்பே அல்லவா? இதன் பின்னர்ப் புத்த சமயம் சுமார் கி. மு. 3-ம் நூற்றாண்டில் தமிழகம் புகுந்தது. பௌத்தர் மதுரை, காஞ்சி, காவிரிப் பூம் பட்டினம், வஞ்சிமூதூர் முதலிய தலை நகரங்களில் மடங்களை ஏற்படுத்தினர்; சமணரும் அங்ஙனமே செய்தனர்; அவற்றுக்குப் 'பள்ளி' என்பது பெயர்; அப்பள்ளியில் உள்ள கூடத்தில் தமிழரை அமர்த்தித் தமிழைக் கற்பித்து, தங்கள் சமய போதனைகளையும் செய்து வந்தனர். அன்று முதற்றான் பிள்ளைகள் படிக்கும் இடம் 'பள்ளிக்கூடம்' என்று பெயர் பெற்றது.

இங்ஙனம் வைதிகர் ஆகிய வடமொழியாளரும் சமணரும் பௌத்தரும் தமிழகத்தில் புகுந்திருந்தமையால்—அவரவர் சமயப் பிரசாரம் செய்தமையால் — தமிழ் மொழியில் வடசொற்கள் கலத்தல் ஆயின.[1]

தமிழ் நூல்களில் உள்ள வடசொற்களின் கணக்கு (ஏறக்குறைய):

1. தொல்காப்பியம் — 100-க்கு 2 சொற்கள் சம்ஸ்கிருதம்
2. அகம், புறம் முதலிய சங்க நூல்கள் } 3 ,,
3. பத்துப்பாட்டு, பரிபாடல் — 5 ,,
4. சிலப்பதிகாரம், மணிமேகலை— 6 ,,

1. Vide V. G. Suryanarayana Sastriar's 'History of the Tamil Language' p. 26—36.

| | | | |
|---|---|---|---|
| 5. | சிந்தாமணி, நாலடியார், பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் | 6 | சம்ஸ்கிருதம் |
| 6. | தேவாரம், திருவாசகம் | — 10-15 | ,, |
| 7. | நாலாயிரப் பிரபந்தம் | — 15-25 | ,, |
| 8. | மணிப்ரவாள நடை | — 50 | ,, |
| 9. | வில்லி பாரதம் | — 50 | ,, |
| 10. | பிற்காலப் புராணங்கள் | — 50 | ,, |
| 11. | இப்போதுள்ள வசன நூல்கள் | 50 | ,, |

குறிப்பு :— இன்றும் வடமொழி கற்றவரும் வட மொழியே தம் தாய்மொழி என்று எண்ணும் பார்ப்பனரும் தமிழில் நூல் எழுதின், வடசொற்கள் மிகுந்தே காணப்படுகின்றன. தமிழ்நாட்டுப் பிள்ளைமார் முதலியோர் தமிழ் எழுதின் வட சொற்கள் குறைந்தே காணப்படுகின்றன. உதாரணமாக மறைமலையடிகள் (சுவாமி வேதாசலம்) எழுதும் நூல்களில் 100-க்கு ஒன்றிரண்டு வடசொற்கள் காண்டலே அருமையாக இருக்கிறது.

கி. பி. 300—கி. பி. 550 வரை தமிழகம் 'களப்பிரர்' ஆட்சிக்கு உட்பட்டு அல்லற்பட்டது; அவர்கள் சமண சமயத்தை ஆதரித்தவர்கள். அவர்கள் காலத்தில்தான் சிந்தாமணி, சூளாமணி, நாலடியார் முதலியவற்றைச் சமணர்களே செய்தார்கள். எனில், அவற்றில் வடசொற்கள் மிகுந்திருக்கக் கேட்பானேன்? கி. பி. 600—800-க்கு உட்பட்ட தேவாரங்களிலும் நாலாயிரப் பிரபந்தத்திலும் 100-க்கு 10-முதல் 20-வரை வடசொற்களைக் காணலாம். நாலாயிரத்தில் (வைணவ நூலில்) 100-க்கு 25-க்கு மேலும் இருத்தல்

கூடும். வைணவ ஆசிரியர்கள், தமிழும் வடமொழியும் கலந்த 'மணிப்ரவாள நடை' ஒன்றை ஏற்படுத்தினர்கள். அஃதாவது 100-க்கு 50 சொற்கள் தமிழ்; 50 சம்ஸ்கிருதம். என்ன அழகு! கி. பி. 10-ம் நூற்றாண்டுக்குள் தமிழகத்தில் சமண-பௌத்த சமயங்கள் மறைந்துவிட்டன; வைதிக(வேத) மதம் தலை தூக்கிநின்றது. வடமொழிப்பண்டிதர்கள் போற்றப் பட்டார்கள். இவர்கள் (கி. பி. 300—900) காஞ்சியில் ஆண்ட பல்லவர்களால் பெரிதும் பாராட்டப்பட்டார்கள்; பல்லவர்களின் சாஸனங்கள் வடமொழியிலேயே எழுதப் பட்டன; 'காஞ்சி', வடமொழியின் 'நாலந்தா'வாக விளங்கி யது. 'தமிழரிடத்திருந்த பல அரிய விஷயங்களையும் மொழி பெயர்த்துத் தமிழர் அறியு முன்னரே அவற்றைத் தாம் அறிந்தன போலவும், வடமொழியினின்றுமே தமிழிற்கு அவை வந்தன போலவும் ஆரியர் காட்டினர்.'[1] புராணங்கள் பலவும் வடமொழியில் செய்யப்பட்டன; பல ஊர்கள், 'க்ஷேத்திரங்கள்' எனப்பட்டன; கோயில்கள் புதியனவாகக் கட்டப்பட்டன; பல பௌத்த—சமணக் கோயில்கள் சைவ—வைணவக் கோயில்களாக மாற்றப்பட் டன; ஊர்களுக்கெல்லாம் வடமொழிப் பெயர்கள் வைக்கப் பட்டுவிட்டன. பழமலை—விருத்தாஜலம், மறைக்காடு— வேதாரணியம் என மாறினமை காண்க. இப்பழந் தமிழ்ப் பெயர்கள் இன்று எத்தமிழர்க்கேனும் தெரியுமா? அந்தோ! கொடிது! கொடிது!! வட சொற்கள் புகாத இடம் இல்லை. பழந் தமிழர் சொற்கள் பேச்சு வழக்கில் மறைந்தன; அவை மறைந்த இடங்களில் வடசொற்கள் புகுந்தன. இன்றைய மண இதழ்களை (விவாஹ சுப முஹூர்த்தப் பத்திரிகைகளை)ப் பார்வையிடின், 100-க்கு 70 சம்ஸ்கிருதச் சொற்கள் வீதம் தமிழ்நாட்டில் அரசு செலுத்தல் காணலாம். எனவே, ஆரியம்

1. V. G. S. Sastriar's 'History of the Tamil Language' p 27

அடியெடுத்து வைத்த நாள் முதல் தமிழகத்தில் இருந்த தூய தமிழ், தன் எழில் கெட்டு, சொற்களை இழந்து கோச்சை யாகி, அந்த இடங்களில் வடசொற்களை ஏற்று, அம்மைத் தழும்புடைய உடலைப் போல—உருக்குலைந்துவிட்டது என் பதை அறிவுடையோர் மறுத்தல் இயலாது! இயலாது! சம்ஸ்கிருதம் வந்ததால், தமிழுக்கு 'நஷ்டமே' (பல சொற்களை இழந்தது) தவிர, 'லாபம் இல்லை' என்பதை மலைமீது நின்றும் சத்தியம் செய்து கூறலாம். 'தமிழில் வடமொழிக் கலப்பு' எனத் 'தமிழ் மொழியின் வரலாறு' என்னும் தமது அரிய நூலில் வி. கோ. சூ. சாஸ்திரியார் வரைந்துள்ளமை நன்கு படிப்பவர் மேலும் பல உண்மைகளை உணரக்கூடும்.

இன்றுள்ள பேச்சுத் தமிழில் 100-க்கு 60 பங்கு வட சொற்களும் 20 பங்கு ஆங்கிலச் சொற்களும் புகுந்துவிட்டன. எஞ்சி இருப்பது 20 பங்கே. இக்கேவல நிலையில், (வட மொழி கட்டாய பாடமாக இல்லாத போழ்தே தமிழ் இக்கதி அடைந்துவிட்டது எனின்,) சம்ஸ்கிருதம் சரிபாதி உள்ள இந்தி 'கட்டாய பாடம்' என ஆக்கப்படின், தமிழ் இறந்தது அல்லது இப்போதுள்ள மலையாளத்தைப் போல—'தமிழ் வேறொரு கலப்பு மொழியாக விரைவில் மாறும்' என்று இப்போதே அழுத்தமாகக் கூறிவிடலாம். இதுகாறும் கூறியன, வடமொழியால் தமிழ்மொழி அடைந்த கேவல நிலைமையைக் காட்டுவன ஆகும். இனி, இவ்வடமொழி தமிழர் நாகரிகத்தை எவ்வாறு 'கொலை' செய்திருக்கிறது எனக் காண்போம்:

# IV. சம்ஸ்கிருதத்தால் தமிழர் நாகரிகமே கெட்டுவிட்டது

இப்போதுள்ள சங்க நூல்களில் வடசொற் கலப்புள்ள சூத்திரங்களையும் செய்யுட்களையும் நீக்கித் தொல்காப்பியம், நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு முதலிய நூல்களில் உள்ள பழைய செய்யுட்களை ஆராயுழி, நம் பழைய பழக்க வழக்கங்கள் இன்னவை எனப் புலனாகும்:

## 1. பண்டைத் தமிழர் மணம்

அகநானூற்றுச் செய்யுட்கள் 86, 136 இரண்டும் பண்டைத் தமிழர் கையாண்ட மணவினையைக் கூறுவன. இதைப் பற்றிக் காலஞ் சென்ற சரித்திரப் பேராசிரியராகிய பி. டி. சீனிவாச ஐயங்கார், "இதுவே பண்டைத் தமிழர் மணமாகும்: இதில் தீவலம் வருதல் இல்லை; தக்ஷிணை பெறப் புரோகிதன் இல்லை; எரிவளர்த்தல் இல்லை. இது முற்றும் தமிழர்க்கே உரிய திருமணம் ஆகும்"[1] என்று கூறியிருத்தல் கவனித்தற்கு உரியது. இன்று நடைபெறுவது இத்தமிழர் திருமணமா? என்பதைத் தமிழ் மக்கள் சிந்திப்பார்களாக. எரி வளர்த்தல், தீவலம் வருதல், சம்ஸ்கிருத மந்திரங் கூறல், புரோகிதன் நடத்தி வைத்தல்-இவை யாவும் தமிழர் பழக்க வழக்கங்கள் அல்ல என்பதை ஐயங்காரே அறைதல் கவனிக்கத் தக்கது. தமிழர் திருமணத்தில் வடமொழி மந்திரங்கட்கு என்ன வேலை? 'தமிழ் மந்திரம் இல்லையே' எனிலோ, தமிழ் மந்திரந்தான் எதற்கு? நம் மூதாதையர் எம்முறையைக் கையாண்டனரோ, அது

---

1. Vide his 'History of the Ancient Tamils,' p. 80.

வன்ரோ நாம் பின்பற்றத் தகுவது! ஏழை மக்களாகிய தமிழர்க்கு இந்த ஆர்ப்பாட்டச் சடங்குகள் ஏன்? மணமகன் 'காசி யாத்திரை போதல்' எவ்வளவு மூடத்தனமான பழக்கம்! குருகுல வாசம் செய்த பார்ப்பன மாணவன், 'காசி யாத்திரை போய் வந்து மணந்துகொள்வேன்' எனக் கூறுதல் பண்டை மரபு. அது தமிழராய நமக்கு எதற்கு? ஓதுவதற்குப் பிரிவ தாயினும், பண்டைத் தமிழர் காசிக்குப் போனதாகச் சான்று இல்லையே! வடமொழி மந்திரங்களும் புரோகிதனும் தமிழர் திருமணத்தில் இடம் பெற்ற அன்றே தமிழரைச் 'சனியன்' பிடித்தது என்னல் மிகையாகாது. தமிழர் திருமணத்தில் சம்ஸ்கிருத மந்திரமா? என்ன வெட்கக் கேடு! வெள்ளையன் திருமணத்தில் தமிழ் மந்திரம் கூறப்படுமா? தமிழ் அறிஞர்களே! நாம் எத்துணை மதியீனமாய் இருந்துவருகிறோம் என்பதற்கு இதனைவிடத் தக்க சான்று வேறு வேண்டுமா? நன்கு நினைத்துப் பாருங்கள்:

## 2. கருமாதி, ஸ்ரார்த்தம்

கருமாதி என்பது தமிழர்க்கு இல்லை. தமிழர் ஒருவர் இறப்பின் அவரை எரித்துவிடலும், தாழியிற் புதைத்தலும் மரபு. இறந்தவர் நினைவாக அவரை எரித்த—அல்லது புதைத்த இடத்தில் (விரும்பினால்) 'கல் எடுத்து' (நட்டு), அதில் இறந்தவர் பெயர் முதலியன குறிப்பிட்டு, அக்கல்லுக்கு மாலை யிட்டுப் போதல் மரபு. ஆண்டுக்கொரு முறை அவரை நினைந்திருக்கலாம். ஏன்? இறந்தவரை என்றும் நினைக்கலாம் அல்லவா? இவ்வளவே பண்டைத் தமிழர் இறந்தவர் பொருட்டுச் செய்த அறிவுடைச் சடங்கு. இதுவே தொல்காப்பியம் முதலிய பண்டைநூல்கள் பகர்வது. இஃது எவ்வளவு அழகாகவும் ஒழுங்காகவும் இருக்கின்றது! இம்முறை இன்று நடைபெறுகிறதா? 'கடன்' வாங்கிக்

கருமாதி செய்யும் தமிழர் லட்சக்கணக்கானவர். மாதந் தோறும் 'மாசியம்' வேறு! ஆண்டு தோறும் 'ஸ்ரார்த்தம்' வேறு! இவற்றுக்கெல்லாம் புரோகிதன் பாடு கொண்டாட்டம்; கொடுப்பவர் பாடு திண்டாட்டம். ஒரு நாளா? ஒரு மாதமா? ஓர் ஆண்டா? இறந்தவன் மகன் இருக்கும் வரை இவற்றுக்கெல்லாம் புரோகிதனுக்குக் கொடுப்பதெனின், எவ்வளவு பணம் நமது அறியாமையாற் கொள்ளை போகின்றது! இப்பழக்கம் நம்முடையதன்று; தமிழர் நாகரிகத்துக்கே முற்றும் மாறுபட்டது. புரோகிதர் கூறும் 'இந்து மதத்'துக்கும் நேர்மாறானது. என்னை? பகவத்கீதையில் கண்ணன், "மனிதன் கிழிந்த ஆடைகளைக் களைந்துவிட்டுத் தூய உடைகளை உடுத்துவது போல—ஆன்மா, இவ்வுடலைவிட்டு வேறு உடலில் உடனே நுழைகிறது"[1] என்று கூறியிருத்தல் காண்க. உடலைப் பிரிந்த உயிர் உடனே வேறு உடலில் நுழைகின்றது எனின், மடத்தனமாகப் புரோகிதனுக்குப் பொருள்கள் பல கொடுப்பானேன்? அவனுக்குக் கொடுப்பது ஆன்மாவை எப்படித் திருப்தி செய்யும்? ஆன்மா ஓர் இடத்தில் இருப்பதாகக் கொள்ளினும், அவனுக்குக் கொடுப்பவை அதற்கு எங்ஙனம் கிடைக்கும்? கிடைப்பதாயினும், அப்பொருள்கள் அவ்வான்மாவுக்கு ஓராண்டு இருக்குமா? இவற்றை நம்மவர் நன்கு சிந்தித்தல் வேண்டும். 'கருமாதி, திதி' முதலியன செய்யும் தமிழர்க்குச் சம்ஸ்கிருத மந்திரங்களின் பொருள் தெரியுமா? புரோகிதன் தம்மை வைகிறான் அல்லது வாழ்த்துகிறான் என்றாவது அறியக்கூடுமா? இத்துணைப் பகுத்தறிவு அற்ற நிலைக்குத் தமிழரைக் கோண்டு வந்து விட்டது ஒரு சம்ஸ்கிருத பாஷை அல்லவா? இக்காரியங்கள் எவ்வளவு மோசமாகப் பிற்காலத்தில் புரோகிதர்களால்

1. Vide Lord Krishna's Baghvad Githa', chap II, S. 22.

சமூகத்துள் நுழைக்கப்பட்டன என்பதை விவரமாக அறிய அவாவுவோர், ஆங்கிலப் பேறறிஞரும் சிறந்த வடமொழிப் புலவரும் காசி ஹிந்து சர்வகலாசாலை ஸிண்டிகேட் உறுப் பினரும் ஆன பாபு கோவிந்த தாஸ் என்பார் வரைந்துள்ள ‘இந்து மதம்’ என்னும் ஆராய்ச்சி நூலைப் படிக்குமாறு வேண்டுகின்றோம். அப்பெரியார், ‘பிதிர்கள், பிண்டம் பிடித் தல், கோத்திரம், சடங்குகள், தீட்டு’ என்பன எத்துணை இயற் கைக்கு மாறானவை — ஆதாரமற்றவை—புரோகிதர் பிழைக்க ஏற்படுத்திக்கொண்டவை—என்பவற்றை நன்கு விளக்கி உருக்கமாக வரைந்துள்ளார்.[1] இவற்றை உணர்ந்து தமிழர் நல்லறிவு பெறும் நாளே ‘தமிழர் உய்யும் நன்னாள்’ ஆகும்.

## 3. விழாக்கள், நோன்புகள்

பண்டைத் தமிழர் விழாக்கள்: கார்த்திகை விழா, பொங் கல் விழா, அரசர் பிறந்த நாள் விழா, போர்வெற்றி விழா, குழந் தைப் பிறப்பு விழா முதலியன. இக்காலத் தீபாவளி, அவிட்டம், சரஸ்வதி பூஜை, விநாயக சதுர்த்தி, ஆயுதபூஜை முதலியன வும் வரலட்சுமி நோன்பு, கௌரி நோன்பு போன்ற பலவகை நோன்புகளும் வடமொழித் தொடர்புடையனவே அன் றித் தமிழர் விழாக்கள் அல்ல! தமிழர் நோன்புகள் அல்ல! இவை அனைத்தும் சம்ஸ்கிருதத்தாலும் புரோகிதரா லும் நம்மிடைப் புதிதாக நுழைக்கப்பட்டவை. இவற்றுக்கு வடமொழி வேதங்களிலும் ஆதாரம் இல்லை. இவை, இடைக் காலத்தில் புராணங்கள் பெருகிய போழ்து புரோகிதர் பிழைக்க உண்டாக்கப்பட்டவை. ‘நோன்பு, விரதம்’ முதலியவைபற்றிப் பாபு கோவிந்த தாஸ் தமது ‘இந்துமதம்’ என்னும் நூலில் அழ காகக் கூறியுள்ளார்.[2] இந்நோன்புச் சடங்குகளில் எல்லாம்

---

1. Vide Babu Govinda Dos's 'Hinduism', p. 315—392.
2. Vide his Book, p. 261—265.

வடமொழி மந்திரங்களே கூறப்படுகின்றன. இஃதொன்றே 'இவை தமிழாய நம்முடையன அல்ல' என்பதைக் காட்டப் போதுமன்றோ ?

## 4. கோயில்கள்

"பண்டைக் காலத்தில் கோயில்கள் இல்லை; விக்கிரகங்கள் இல்லை. இவை இரண்டும் மிக்க பிற்பட்ட காலத்திலேயே தோன்றியவை. யாகங்கள் நிறுத்தப்பட்ட பிறகே இவை தோன்றலாயின. புத்தருக்கும் மஹாவீரர்க்கும் பின்னரே கோயில்கள் தோன்றின எனல் பொருந்தும்."[1] "விக்ரகம் என்னும் சொல் வடசொல். அதற்குரிய தமிழ்ச் சொல்லே இல்லை. இதுகொண்டே தமிழர்க்கு விக்ரக வணக்கம் இல்லை என்று கூறலாம். இவ்வணக்கம் பார்ப்பனரால் தமிழகத்தில் நுழைக்கப்பட்டது. பார்ப்பன(இந்து) மதம் தமிழ் நாட்டிற் பரவியுள்ளது என்பதை அறிய அம்மத சம்பந்தமான சொற்கள் சம்ஸ்கிருதச் சொற்களாக இருத்தலே தக்க சான்றாகும். புராணகாலத்தில் இக்கொள்கைகள் தமிழ் நாட்டிற் புகுந்தன. விக்ரகம் என்னும் சொல்லும் பொருளுமே பண்டைத் தமிழர் பழக்கங்கட்கும் எண்ணங்கட்கும் புதியவை."[2] நம் தமிழகத்தில் தேவார காலத்திற்குச் சிறிது முன்னரே கோயில்கள் சிறிய அளவில் ஏற்பட்டன; களிமண் சுவர்; ஓலைக்கூரை. இவைதாம் கோயில்கள். தேவார காலத்தில் சிவலிங்கங்கள் மரத்தடிகளில் இருந்தன. அவற்றையே நாயன்மார் வழிபட்டனர். அம்மரம் இன்று 'ஸ்தல விருக்ஷம்' எனப்படுகிறது. பல்லவ அரசர்களே சைவ-வைணவக் கோயில்களைக் கற்களால் அமைத்தார்கள்; மலைக் குகைகளைக் குடைந்து கோயில்கள்

1. Vide Babu Govinda Dos's Hinduism' p. 263, 264.
2. Caldwell's Comparative Grammar, Int. p. 47. (Ed. 3.)

அமைத்தார்கள். பின்னரே இராஜராஜ சோழன் முதலியோர் சோணாட்டிலும் பாண்டியநாட்டிலும் கற்கோயில்கள்கட்டினார்கள். அப்பொழுது (கி. பி. 700 முதல் 1200 வரை) சமண-பௌத்த மதங்கள் உரம் ஒழிந்து, வைதிக மதம் பரவிய காலமாகும். அக்காலமே வடமொழியும் தமிழகத்தில் ஆதிக்கம் செலுத்திய காலம். எனவே, கோயில்களில் பூசை செய்ய வடமொழியாளர் இடம் பெற்றனர்; வடமொழி மந்திரங்கள் செல்வாக்குப் பெற்றன. சைவக் கோயில்களில் இருப்பவர் ஆதிசைவர் (வேளாளர்). இவர்களைப் பார்ப்பனர் தம்மோடு சேர்த்துக் கொள்ளாமையே இதற்குச் சான்று. ஆயினும், குருக்கள் வடமொழியிலேயே மந்திரம் கூறிப் பார்ப்பனர் நிலையை அடைய அப்பண்டைக் காலத்தில் முயன்றனர்; பூணூல் போட்டுக்கொண்டனர்; இன்றும் அந்நிலையிலேயே இருந்து வருகின்றனர்.

இராஜராஜ சோழன் முதலியவர் காலத்தில் தேவாரம் 'ஓதுவார்' கோயில்களில் இருந்தனர். இன்று 'தேவாரம்' கோயில்களில் இறந்துவிட்டது. தமிழ்நாட்டு அரசர்கள் தமிழர் வரிப்பணத்தைக் கொண்டு தமிழர்க்காகக் கட்டிய கோயில்களில் தமிழ் மந்திரங்கள் இல்லை; தேவாரம் இல்லை; தமிழர் கர்ப்பக் கிருஹத்துக்குள் போகலாகாது. வடமொழி மந்திரம் சொல்பவரும் வடமொழியே உயர்ந்ததெனக் கூறுபவரும் தமிழரைச்—'சூத்திரர்' என்று இகழ்பவருமே கர்ப்பக்ருஹத்திற்குள் போகலாம்; எல்லாவிதப் போக பாக்கியங்களைக் கோயிலிலும் அதன் சொத்துக்கள் மூலமும் அனுபவிக்கலாம். அவற்றில் தமிழர்க்கு உரிமை யில்லை. தப்பித் தவறி எங்கேனும் ஓதுவார் வைக்கப்படின், அவர்கள் வேதம் ஓதுவாரைவிட இழிவான முறையிலேயே நடத்தப்படுகின்றனர். வேதம் ஓதுபவரே 'கடவுள்' உலாப்போகையில் முதலில் செல்

வர்; தேவார கோஷ்டியினர் கடைசியிற்றான் போதல் வேண்டும். இக்கேவல நிலைமையைவிடத் தமிழர்க்கு வெட்கக் கேடானது வேறு என்ன வேண்டும்? வடமொழிக்குத் தமிழகத்தில் உள்ள ஆதிக்கம் பாருங்கள்! தமிழன் எவ்வளவு மோசமான நிலையில் இருந்திருப்பின், இவ்வளவு இழிநிலை வந்திருக்கும் என்பதையும் எண்ணிப் பாருங்கள்! தமிழ் மெய்யாகவே உயர்ந்திருக்கிறதா? தாழ்ந்து பாதாளத்தில் அழுத்தப்பட்டிருக்கிறதா? என்பதையும் அன்புடன் சிந்தித்துப் பாருங்கள்!

## 5. பெயர்கள்

மக்கள் சென்று காணத்தக்க கோயில்கள் இருக்கும் ஊர்களின் பெயர்கள் நாளடைவில் வடமொழிப் பெயர்களாக மாறிவிட்டன. தேவார காலம்வரை தமிழ்ப் பெயர்களைப் பெற்றிருந்த அவ்வூர்களில் பல, இன்று வடமொழிப் பெயர்களைப் பெற்றுள்ளன. காரணம் யாது? 'வடமொழி மதம், அது சம்பந்தமான கோயில்கள், விக்ரகங்கள், மந்திரங்கள், விழாக்கள், ஸ்நான காலங்கள் முதலியன இத்தமிழகத்தில் பல்கிப் பெருகிவிட்டமையே தக்க காரணம் ஆகும். தமிழ் மக்கள் 'மதவெறி'யில் தங்கள் தமிழை மறந்தனர்; பழக்க வழக்கங்களை மறந்தனர்; தத்தெடுத்த வைதிக மதக்குழியில் வீழ்ந்தனர்; தம்மதிப்பு இழந்தனர்; எனவே, வடமொழி 'தேவபாஷை' எனப் புரோகிதர் கூறியதை நம்பினர்; அதற்கு அடிமையாகித் தம்மைப் பெற்று வளர்த்த தாய்மொழியாம் தமிழைப் புறக்கணித்தனர். இன்று கழுகாஜலம் (திருக்கழுக்குன்றம்), வேதாஜலம் (மறைமலை), விருத்தாஜலம் (பழமலை), வேதாரண்யம் (மறைக்காடு) என்னும் பெயர்களே தமிழர்க்குத் தெரிந்தவை. தமிழ்ப் பெயர்களைக் கூறினால், தமிழர்க்கே அவை தெரியா. இவ்வளவு மானக்கேடான நிலைமை வேறு எந்த

மாகாணத்திலேனும் காண முடியுமா? இங்கிலாந்தில் உள்ள ஊர்கட்குத் தமிழ்ப்பெயர் வைப்பின், அந்நாட்டு மக்கள் அதனை ஏற்றுக்கொள்வரா? தமிழர் விலங்கு நிலையை அடைந்த விதம் வேறு எவரும் அடையார்! அடையார்!! தம் மதிப்பு இழந்து தவிப்பவர்—மொழி கெட்டுத் தவிப்பவர்—மானம் இழந்து தவிப்பவர்—தமிழரே ஆவர்.

ஊர்களின் பெயர்கள்தாம் இக்கதி அடைந்தனவே! தமிழ் மக்கள் பெயர்களாதல் 'தமிழ்ப் பெயர்கள்' ஆக இருக்கின்றனவா? 'ராமமூர்த்தி, கிருஷ்ணமூர்த்தி, ஜலஜாட்சி, கமலாட்சி' முதலிய வடமொழிப் பெயர்களே 100-க்கு 90 அல்லவா? கல்வி அறிவு இல்லாத தமிழ்க் கிராமவாசிகள் பெயர்கள் நீங்கலாக, ஏனைமக்கள் பெயர்கள் அனைத்தும் வடமொழிப் பெயர்களே அல்லவா? இஃது எத்துணை மானக் கேடு! எந்த வடநாட்டானுதல் 'முருகன், வேலன்' என்னும் தமிழ்ப் பெயர்களை வைத்துக்கோள்ளுதல் உண்டா? வைத்துக்கோள்ளத்தான் அவன் மனம் துணியுமா? இந்த அறிவும் சுயமதிப்பும் இராமைக்குத் தமிழர்பால் பகுத்தறிவும், கல்வி அறிவும் இல்லாமையே காரணம் ஆகும். தமிழர்க்குப் பெயர்கள்கூடச் சம்ஸ்கிருதச் சொற்களே எனின், இக்கொடுமையை எவரிடம் சென்று முறையிடுவது! மெய்யாகவே தமிழன் இப்போழ்து உயிருடன் இருக்கிருனு? இறந்துவிட்டானு? என்று ஐயங்கொள்ளல் தவருகாது அன்றோ? இத்துணைக் கேடுகள் ஒரு 'வடமொழி'யால் தமிழர்க்கு வந்தன எனின், மேலும் 'இந்தி' கட்டாய பாடமாகத் தமிழ் நாட்டில் வருமாயின், என்ன பெருங்கேடுகள் விளையும் என்பதனையும் இப்போழ்தே தமிழர் எண்ணிப் பார்ப்பார்களாக! ஆவன விரைந்து செய்வார்களாக!

## 6. ஹிந்து மதம்

தமிழர் எவ்வளவு அறிவு கெட்டவர் என்பதை இதனைக் கொண்டு நன்கு உணரலாம்: 'ஹிந்து, மதம்' என்னும் இரு சொற்களும் வடமொழிச் சொற்கள். 'ஹிந்து, ஹிந்துஸ்தான், ஹிந்து மதம்' என்னும் சொற்கள் சம்ஸ்கிருத நூல்களில் இல்லை. பாரசீகர் நூல்களில்தாம் இவை காணப்படுகின்றன. 'சிந்து' என்பது பாரசீகர் உச்சரிப்பில் 'ஹிந்து' என வரும். சிந்து நதிக்கரையில் வசித்த மக்கள் 'ஹிந்துஸ்' எனப் பாரசீகரால் அழைக்கப்பட்டனர். அவர்களே 'ஆரியர்.' அவர்கள் மதமே 'ஹிந்து மதம்' என்பது.[1] அவர்கள் வசித்த வட இந்தியா 'ஹிந்துஸ்தான்' எனப்படும். எனவே, 'ஹிந்து மதம்' என்பது வட இந்தியாவிற் புகுந்து அங்கிருந்த திராவிடரை (நம் முன்னோரை) அடிமைப்படுத்திய —அவர்களது திராவிட மொழியை ஒழித்துவிட்ட—ஆரிய மக்களுடைய மதம் ஆகும். அதனைத் தமிழ் மக்கள் தங்கள் மதம் எனக் கூறுதல் எத்துணை அறியாமை! ஹிந்துமத நூல்கள் என்பன யாவும் சம்ஸ்கிருத நூல்களே: வேதங்கள், சம்ஹிதைகள், பிராமணங்கள், உபநிஷத்துக்கள், புராணங்கள், கீதைகள் முதலியன. நமக்கு முற்றும் மாறுபட்ட மொழியினரால்—மாறுபட்ட பழக்க வழக்கங்களைக் கொண்ட மக்களால்—நம்மைச் 'சூத்திரர்' எனக் கூறும் வடமொழியாளரால் அல்லவா இவை செய்யப்பட்டவை! ஜாதி அறியாத இத் தமிழகத்தில் ஜாதிகளை உண்டாக்கிய மதம் அல்லவா இது? இம்மதத்தின் பெயரால் தமிழர் பணம் எவ்வளவு கொள்ளை போகின்றது! இம்மதத்துக்கு நம் பண்டைச் சங்க நூல்களில் (வடமொழிக் கலப்பு இல்லாத பாக்களில்) கடுகளவேனும் ஆதாரம் உண்டா? இல்லையே! 100-க்கு 90 பேர்

---

1. Vide Babu Govinda Das's 'Hinduism' p. 46, 47, 386, 390.

படியாத இத்தமிழ் நாட்டில் இம்மதத்தின் பெயரால் நடக்கும் மோசங்கள், கொள்ளைகள், அக்கிரமங்கள் கணக்கிடல் முடியுமா? பாமர மக்கள் எளிதில் ஏமாற்றப்படுகிறார்கள்; 'மோக்ஷம், நரகம்' என்பவை 'புரோகிதன் கற்பனை' என்பதை மக்கள் இன்றும் அறிந்துகொள்ளவில்லை. இவற்றை எல்லாம் தமிழ் மக்கள் உணர்ந்து மதவெறியை அகற்றும் நாளே—தமிழர் தம் மானத்துடன் வாழும் பொன்னாள் ஆகும்! 'நமது தமிழ் அறநெறிக்கு மாறான எதனையும் நாம் மதத்தின் பெயரால் கைக்கொள்ளல் ஆகாது' என்னும் உறுதிப் பாட்டைத் தமிழர் கைக்கோடல் வேண்டும். இதனை விரிப்பிற் பெருகும். வடமொழிக்குத் தமிழ் நாட்டில் செல்வாக்குத் தந்ததால் அல்லவா, தமிழர் இந்து மதத்துக்கும் மூட நம்பிக்கைக்கும் இரையானார்கள்; தம்மானம் இழந்து விலங்கு நிலையை அடைந்தார்கள்! இதனைத் தமிழ் மக்கள் நன்கு ஆராய்வார்களாக. இந்து மதத்தைப் பற்றிய உண்மை நிலையை அறிய அவாவுவோர் பாபு கோவிந்த தாஸ் வரைந்துள்ள 'இந்து மதம்' என்னும் நூலை ஊன்றிப் படிக்குமாறு வேண்டுகிறோம். இந்து மதத்தின் பெயரால் நம்மைக் கேவலப்படுத்தி எழுதப்பட்டுள்ள நூல் இராமாயணம். என்னை? ஜவாஹிர்லால் தமது மகளுக்கு எழுதிய கடிதங்கள் அடங்கிய நூலின் 31-ம் அதிகாரத்தில் கூறுவன காண்க: "இராமாயணம் என்பது ஆரியர்க்கும் இராவணன் முதலிய திராவிடர்க்கும் நடந்த போராட்டத்தைப் பற்றிய நூலாகும். அதில் குறிக்கப்படும் குரங்குகள், இராக்ஷதர் என்பவர் தென் இந்தியாவில் உள்ள கறுப்பர்களாகவே இருத்தல் வேண்டும்."[1] இங்ஙனம் நம்மையே இழித்துக்கூறும் இந்நூலை நாமே பணங் கொடுத்துக் காலக்ஷேபம் வைத்துக் கேட்டு

---

1. Vide 'His Letters', chap. 31, p. 84, para 6 (4th ed. 1937)

மகிழ்வதாயின், நமது கேடுகெட்ட—அறிவிழந்த—மானக் கேடான—பேடித்தனமான நிலைக்கு யாரை நோவது?

## 7. சாதிகள்

'ஜாதி, வருணம்' என்பன வடசொற்கள். இச்சாதிகளும் ஆரியர்க்குள் தொழில் பற்றியே முதலில் ஏற்பட்டன. பின்னர்ச் சுய நலமிகளால் உயர்வு, தாழ்வுகள் கற்பிக்கப் பட்டு, அவை அப்படியே நிலைபெறச் செய்யப்பட்டன. பண்டைத் தமிழ் நாட்டில் சாதிகள் இல்லை. அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்போர் தொழில்பற்றி வந்த பெயர்கள். அரசமுறை செய்பவன் அரசன்; இவன், இப்போது கூறப்படும் எந்தச் சாதியையும் சார்ந்தவன் ஆகான். அந்தணர் யாவர்?

> "அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
> செந்தண்மை பூண்டொழுக லால்"

என்பது அந்தணர் இலக்கணம். இஃது எந்தச் சாதியினரையும் குறித்ததன்று. வணிகர்—பண்டங்கள் விற்போர் அனைவரும் இப்பெயரால் அழைக்கப்பட்டனர்: "பிட்டு வாணிகர், அப்பவாணிகர், உப்புவாணிகர், கூலவாணிகர்...." என வரும் சிலப்பதிகார உரை நோக்குக. வேளாளர் என்போர் உழுதுண்டு வாழ்பவர். இவர் வாழ்வே உயர்ந்ததென்பது தமிழர் அறமாகும்.

> "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
> தொழுதுண்டு பின்செல் பவர்"

என்பது திருக்குறள். இவர்கள் பெரும்பாலும் மருதநில மக்கள். இவர் அல்லாமல் குறிஞ்சி, முல்லை, நெய்தல் என்னும் நிலத்தில் வாழ் மக்களும் உளர்.

1. குறிஞ்சி—மலையும் மலைசார்ந்த இடமும்—குறவர், குறத்தியர்.

2. முல்லை— காடும் காடு சார்ந்த இடமும்—இடையர் (நடுநிலத்தார்).

3. நெய்தல்—கடலும் கடல்சார்ந்த இடமும்—பரதவர், கரையாளர்.

'பாண்' (பாட்டு) வல்லார் 'பாணர்' எனப்பட்டனர். குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் ஐந்தில் நடுவில் இருப்பது 'முல்லை' அல்லவா? அஃது 'இடை' நிலம் (நடுநிலம்) எனவும் படும். இதனால் அங்கிருப்பவர் 'இடையர்' (இடைநிலத்தார்) எனப்பட்டனர். இதனை ஒரு சாதி என் பதைவிட மூடத்தனம் வேறு உண்டோ? அரசனது ஆணையை மாநகரத்தார்க்கு அறிவிப்பவன் 'பறையன்' எனப் பட்டான்; பறை—அறிவி (வினைப்பகுதி), பறையு—அறிவி (மலையாளப் பகுதி); பறை+அன்=பறையன். இஃது உத்தி யோகப் பெயரே அல்லது ஜாதி பற்றிய பெயர் ஆகாது. இத் தொழில் செய்பவர் எங்ஙனம் தாழ்த்தப்பட்டோர் ஆவர்? 'நாயகர்' என்னும் இக்கால வகுப்பினர், தமிழ் வேந்தர்க்குப் படை வீரராகவும் படைத் தலைவராகவும் இருந்த வீரத்தமிழ்க் குடியினராவர். என்னை? 'நாயகர்' என்போர் தென்னாட்டில் 'படையாட்சியர்' என இன்றும் வழங்கப்படல் காண்க. இஃது உத்தியோகப் பெயர் ஆகும். 'மறவர்' என ஒரு வகுப்புண்டோ? மறம்—வீரம்; மறவர்—வீரர். இஃது எச் சாதியினரையேனும் குறிப்பதாமோ?

(1) ஐயர்-'ஐ—வியப்பு ஆகும்' என்பது தொல்காப் பியம். ஐ+அன்=ஐயன் - வியத்தகு குணாதிசயங்களை உடையவன், என்பது பொருள்.

(2) 'ஐ-தலைவன்' என்பது புறநானூறும், குறளும் கொண்ட பொருள்: "என் ஐ முன் நில்லன்மின் தெவ்விர்!" என்பது திருக்குறள்; 'பகைவரே! என் அரசன் (தலைவன்) முன் நில்லாதீர்' என்பது இதற்குப் பொருள்—குறள்-771

(3) 'ஐயர்-அண்ணன்மார்' என்பது 'புறப்பொருள் வெண்பா மாலை' கொண்ட பொருள்:

"முன்னின்று மொய்யவிந்தார் என் ஐயர்"-'ஐயர்-தமை யன்மார்' (வாகைப்படலம், செ. 22 உரை.)

(4) தென்னாட்டுத் தமிழர் இன்றும் தந்தையை 'ஐயா' என அழைத்தல் கண்கூடு. அதன் முதல் வேற்றுமை என்ன? 'இராமன்-இராமா!' என்பது போல, 'ஐயன்'—'ஐயா!' என் பது அன்றோ? எனவே, 'ஐயர்'—என்னும் சொல் (1) வியத் தகு நுண்ணறிவுடைய பெருமக்களையும், (2) தலைவன், அரசன், கடவுள் இன்னோரையும், (3) தந்தையையும், (4) தமையன்மாரையும் குறிக்கும் சொல் என்பது நன்கு விளங்கு கிறது அல்லவா? இன்று 'ஐயர்' என்பது 'பார்ப்பனரையே குறிப்பதாக இருப்பது' எந்த உரிமைபற்றி? இஃது எத்துணை அறியாமை? இவ்வறியாமை நம்மவரையும் பிடித்து ஆட்டு கிறது. 'முதலியார், பிள்ளை' என்றெல்லாம் வைத்துக்கொண்டு ஆர்ப்பாட்டம்' செய்தல் அறிவுடையாமா? பழைய சங்க நூல்களில் சாதிபற்றிய பெயர்களைக் காண்பதே அருமை.

இதுகாறும் கூறியவற்றால், பண்டைத் தமிழகத்தில் 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்பதே கொள்கையாக இருந்தது என்பதும், உத்தியோகப் பெயர்களும் தகுதிப்பெயர் களும் பிற்காலத்தில் அவரவர் வழி வழி வந்தார்க்குச் 'சாதிப் பெயர்கள்' எனத் தவறாக வழங்கலாயின என்பதும் விளங்கும். ஆயின் பார்ப்பனர், தாம் வடநாட்டில் ஏற்படுத்திய 'பிரம்ம,

க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்' என்னும் நால்வகை வகுப்புகளைத் தமிழகத்தில் நுழைக்க முயன்று, இன்று எல்லாத் தமிழரை யும் 'சூத்திரர்' என்றே வழங்கி வருதல் நாம் அறிந்துள்ள ஒன்று. இதனை 'இல்லை' என்று யாவர் மறுத்தல் கூடும்? தமிழ்ப் பெண் ஒருத்தி வறுமை மேலீட்டால் பார்ப்பனர் வீட் டில் வேலை செய்யின், 'சூத்திரச்சி வந்தாளா?' என்றே அவர்கள் இன்றும் கேட்கின்றனர். இஃது எத்துணை மானக் கேடான சொல்! சூத்திரன் யாவன் ?—'அடிமையாகப் பிடிக் கப்பட்டவன், வைப்பாட்டி மகன், அறிவில்லாதவன்' என எழு பொருள் மனுஸ்மிருதியில் கூறப்படுகிறது. இன்று தமிழர் அனைவரும் 'சூத்திரர்' என அழைக்கப்படுகின்றனர் எனின், இதனைவிட நமது அறியாமைக்குச் சான்று வேறு வேண்டுமா? 'இந்தியாவில் சாதிகள் இல்லாத காலம் — அவை ஏற்பட்ட விதம்—அவற்றால் உண்டாகியுள்ள அளவிடற்கரிய தீமைகள்' இவற்றை வடமொழிப் பண்டிதராய பாபு கோவிந்த தாஸ் அவர்கள் தமது நூலில் 53 பக்கங்கள் கண்ணீர் விட்டு எழுதியுள்ளமை படித்துணரத் தக்கது.[1] இது பற்றிய டாக்டர் பி. சி. ரே. அவர்களின் உருக்கமான சொற் பொழிவும் படித்தற்குரியது.[2]

## 8. ஹிந்து மதச் சட்டம்

இன்று நமக்கு நீதி வழங்குவது வடமொழிச் சட்டம் என்பதைத் தமிழர் அறிதல் வேண்டும். 'சிவில் சட்டம்' எனப்படுவது மநுதர்ம சாஸ்திரத்தை அடிப்படையாகக் கொண்டது. மநுதர்ம சாத்திரம் சாதிக் கொரு விதிகூறும் அக்கிரம நூல் என்பதை யாரே அறியார்? 'பார்ப்பானுடன் சமநிலையில் உட்கார்ந்த பிராமணன் அல்லாதவனுடைய கால்

1. Vide his 'Hinduism' p. 393-453, and Tagore's Lecture on 'Indian Nationalism' (Macmillen & co.,)

2. Vide 'Essays & Discourses by Dr. Sir. P. C. Ray'. p. 213-235

களை வெட்டிவிடல் வேண்டும்; பிராமணன் வேதம் ஓதலைச் சூத்திரன் தவறிக் கேட்டாலும் அவன் காதில் ஈயத்தைக் காய்ச்சிஊற்றவேண்டும்; பிராமணப்பெண்ணோடு சேர்ந்த பிராமணன் அல்லாதவனை, அவளைப் போலச் செய்து காய்ச்சப் பட்ட இரும்புப் பதுமையைத் தழுவச் செய்தல் வேண்டும்'[1] என்பன போன்ற கொடுமையான விதிகளைக் கூறுவது மநு 'தர்ம' சாஸ்திரம்! என்ன அழகான பெயர்!! 'தர்ம' சாஸ்திரம்! 'பிராமணன், பிராமணப்பேண் அல்லாத ஒரு பேண்ணைச்சேர்ந்து மகனைப்பெறின், அம்மகனுக்கு அப்பிராமணன் சொத்தில் பங்கில்லை. ஆனால் பிராமணன் அல்லாத ஒருவன் பிராமணப் பெண்ணைச் சேர்ந்து மகனைப் பெறின், அம்மகனுக்கு அவன் தந்தை சொத்தில் பங்குண்டு' என்பது இன்றைய சட்டம். இது நியாயமானது என்று எத்தமிழனாவது ஒப்புக்கொள்வானா? இது நேர்மையானதா? இத்தகைய விதியுடைய நூல் 'தர்ம சாஸ்திரம்' என்றால், 'தர்மம்'—என்பதற்குப் பொருள் 'அதர்மம்' என்பதா? தமிழர்கள் இதனை நன்கு எண்ணிப் பார்ப்பார்களாக!

"ஹிந்து மதச் சட்டம் என்பது சம்ஸ்கிருதச் சட்டம். இந்துக்கள் என்று (தவறாகக்) கருதப்படும் சென்னை மாகாண வாசிகட்கு இச்சட்ட மூலம் வழக்குத் தீர்க்கும் வேலை மெய்யாகவே பல தீமைகளைச் செய்கிறது. இம்மாகாணக் குடிமக்கள் அனைவரும் இதனை வெறுக்கின்றனர். மெய்யான நீதி வழங்கப்படுதல் இல்லை. அதற்கு மாறாக, நீதி மன்றங்கள் வழங்கும் தீர்ப்புகள் முற்றிலும் நியாய மற்றவை. இம்முடிபுகளால், குடும்பங்கள் பிரிக்கப் படுகின்றன; பெருந்தன்மையான குடும்பங்கள் பிச்சை எடுக்கும் நிலைக்கு வந்துவிட்டன; சந்தேகமும் உறுதி யின்மையும் எங்கும் குடிகொண்டுள்ளன; சொத்தின் மதிப்பு எங்கும் விரைவில் குறைந்துவருகிறது.

1. Vide G. Das's 'Hinduism' p. 427.

சென்னை அரசாங்கம் தனக்குட்பட்ட பல்வேறு குடி மக்களின் பழக்க வழக்கங்களைப் பாதுகாப்பதாகப் பல முறை சொல்லிவந்திருக்கிறது. ஆனால் பயனில்லை. இம்மக்களின் பழக்க வழக்கங்கள் எவை என்பதை அறியத் தக்க முயற்சி எடுத்துக்கொள்ளல் வேண்டும். விஸ்வப்பிராமணர், மறவர் முதலிய கணக்கற்ற வகுப்பார்மீது நியாயமற்ற பிராமணச் சட்டத்தை உபயோகிப்பது நியாயமற்றதும் ஒழுங்கற்றதும் (Immoral) ஆகும் என்று நான் கருதுகிறேன். ஆங்கிலேயர்க்கு இங்கிலாந்தில் உள்ள சட்டத்தை இம்மாகாண மக்கள் மீது சுமத்துவது எவ்வளவு நியாயமற்றதோ அவ்வளவு நியாயமற்றது ஹிந்து மதச் சட்டத்தை இம்மாகாண மக்கள் மீது உபயோகப் படுத்துவது."[1]

தமிழர்களே! 'சம்ஸ்கிருதம்' செய்துள்ள வேலையை இப்போதாவது நீங்கள் உணருகிறீர்களா? ஒரு வடமொழி நமது நாட்டிற் புகுந்து இத்துணைக் கேடுகளைச் செய்திருக்கிறது கண் எதிரில் தெரியும்பொழுது, காட்டாய இந்தியை வரவேற்கத் தமிழர் மனம் துணியுமா? வந்துள்ள அவமானத்தையும், இதுவரை சம்ஸ்கிருதத்தால் ஏற்பட்டுள்ள கஷ்ட நஷ்டங்களையும் நீக்கிக்கொண்டு தலைநிமிர்ந்து வாழ நாம் பாடுபடுவதா? மேலும், கீழே பாதாளத்தில் அமிழ்ந்துபோவதற்கு இந்தியையும் நம் நாட்டில் நுழைய விடுவதா? வீரத் தமிழர்களே! நன்றாய்ச் சிந்தித்துத் தீர்ப்புக் கூறுங்கள். நீங்கள் உங்களை உயர்த்தப் போகிறீர்களா? தாழ்த்தப் போகிறீர்களா?

## 9. தமிழர் ஏமாந்த நிலை

புரோகிதர் வடமொழியில் செய்த 'கருட புராணம்' என்றொரு விநோத நூல் உண்டு. அதனில் புரோகிதர் வயிற்

1. J. H. Nelson's 'Hindu Law as Administered by the Judicature at Madras' (1877)

றுப் பிழைப்பைக் கருதி 'தானங்கள் முதலியவை பார்ப்பன ருக்கே செய்யவேண்டும்; அப்பொழுதுதான் ஆன்மாவுக்கு மோக்ஷம் கிடைக்கும்' என்றெல்லாம் எழுதப்பட்டுள்ளது![1] அவற்றை நம்மவர் தம் அறியாமையால் மெய்யென்று நம்பித் தாம் வருந்தித் தேடிய பொருளைப் புரோகிதர்க்கு வழங்கி, 'மோக்ஷம்' கிடைக்கும் என்று இன்றும் நம்பி வருகின்றனர். நம் பண்டைத் தமிழ் நூல்களில் இதற்கோர் எள் மூக்களவும் ஆதாரம் இல்லை. 'நல்வினை செய்தவன் நன்மை அடைவான்; தீவினை செய்தவன் தீமை அடைவான்' என்பதே தமிழர் கொள்கை. 'பிராயச்சித்தம்—உபவாஸம்—சாந்தி—அன்ன சத்திரங்கள் கட்டிப் புரோகிதர்க்குப் போஜனமும் தக்ஷிணையும் அளித்தல்' முதலியன பழைய தமிழர் கொள்கைகள் அல்ல. இவை, நம்மை ஏமாற்றிப் பிழைக்கப் புரோகிதர் செய்து வருபவை. ஐயோ! இவற்றைச் செய்து பொருள் இழந்த குடும்பங்கள் எத்துணைய? எண்ணத் தொலையுமோ? நாள் முழுவதும் உடல் வருந்த உழைக்கும் 6 அணுக் கூலிக்காரன், 'திதி'க்காக மார்வாடியிடம் ரூ. 2—0—0 கடன் வாங்கும் அக்கிரமம் என்று ஒழியும்! 'தீண்டத்தகாதவர்' என ஒதுக்கித் தள்ளிய மக்களிடமும் அப்புரோகிதன் சென்று, இச்சாங்கியங்களைக் கூறிப் பணம் பறிக்கிறான். பணம் வருவதாயின், 'தீண்டாமை' கவனிக்கத் தக்கதன்று போலும்! அந்தோ! இவற்றை நம் தமிழ் மக்கள் அறிந்து அறிவுடன் பிழைக்கும் நாள் எந்நாள்? தமிழர்க்கு என்று நல்லறிவு பிறக்கும்? அறிவற்று மாண்டு மடிகின்றனரே! 'தமிழன் அன்னதானம் செய்வது—புரோகிதன் முதல் பந்தியில் சாப்பிடுவது! என்ன மோசம்! மற்றவரைச் சேர்ந்தவன்தானே தானம் செய்யும் தமிழன்! எல்லோருக்

---

1. Vide Babu Govinda Das's 'Hinduism', p. 312, 313,

கும் ஒரே பந்தியில் அன்னம் இட்டால் என்னை? விருப்பம் இல்லாதவர் எழுந்து போகட்டுமே! தானம் செய்வதிலும் ஜாதி பேதமா? என்று ஒழியும் இந்த அநியாயம்? தமிழர் கட்டும் சத்திரங்களில் தமிழர்க்கு இடம் இல்லை என்பது எவ்வளவு மானக்கேடு? அச்சத்திரக்காரர் தம்மையும் தம் சமூகத்தையுமே அவமானப்படுத்தலை இன்றும் உணரவில்லையே! தமிழர்கள் என்று உண்மையை உணர்வார்கள்?

## 10. வடமொழிப் பள்ளிக் கூடங்கள்

தமிழ் மக்களுக்கே உரிய இத்தமிழ் நாட்டில் தமிழுக்காகத் 'தனிப் பள்ளிகள்' இல்லை. அரசாங்கத்தாராலோ—பல்கலைக் கழகத்தாராலோ நடத்தப்படும் ஒரு தமிழ்க் கல்லூரி (College) இல்லை. ஆனால், தமிழர்க்கு முற்றும் மாறுபட்ட பல சம்ஸ்கிருதப் பள்ளிக்கூடங்களை இத்தமிழ் நாட்டில் அரசாங்கத்தார் நடத்தி வருகிறார்கள். அவற்றில் பார்ப்பனர்களே படித்து வருகிறார்கள். இப்பள்ளிக்கூடங்களைப் பார்வையிட அரசாங்க இன்ஸ்பெக்டர் ஒருவர் இருக்கிறார்; அவர்க்குக் கீழ்ச் சில குமாஸ்தாக்கள் உண்டு. 100-க்கு 97 பேர் தமிழராகவுள்ள இந்த மாகாணத்தில்—தமிழ்க்கென்று தனிப் பள்ளிக்கூடம் இல்லாதபோது, தமிழர் வரிப்பணத்தால்—அவர்க்குச் சிறிதும் சம்பந்தம் இல்லாத—அவர்களுக்கே மேற்கூறப்பெற்ற தீமைகளை எல்லாம் செய்த—சம்ஸ்கிருதத்துக்குத் தனிப் பள்ளிக்கூடங்கள் இத்தமிழ் நாட்டில் இருக்கின்றன எனின், இந்த மானக்கேட்டை என்னென்பது? இதைக் கவனிக்க ஒரு தமிழன் இல்லையே இந்த நாட்டில்! தமிழர் வரிப்பணம் அந்நிய பாஷைக்கு வீணாகக் கொள்ளை போகிறதே! 'தமிழ் வளர்க்கிறோம்' என்று பறை சாற்றித் திரியும் 'அறிஞர்கள்' இதனைக் கவனிப்பார்களா?

இறந்துபோன சம்ஸ்கிருத பாஷைக்குத் தமிழ் நாட்டில் செல் வாக்கா? போதாக்குறைக்குக் கட்டாய இந்தியையும் இந் நாட்டில் நுழைக்க வேண்டுமாம்! தமிழ் உருப்படவா இந்த முயற்சி? ஐயோ! தமிழர் இருக்கின்றனரா? இறந்து விட்டனரா?

இங்கு ஒன்று நினைவில் கொள்ளத் தக்கது: ஜில்லா போர்டு ஆட்சிக்கு உட்பட்டது தஞ்சை 'திருவையாறு—சம்ஸ் கிருதக் கலாசாலை.' அதனில் நம் பார்ப்பனத் தோழர்களே 100-க்கு 99 பேராகப் படித்து இன்பமாகக் காலங் கழித்து வந்தனர். சர். ஏ. டி. பன்னீர்செல்வம் ஜில்லா போர்டு தலைவ ரானதும் அக்கல்லூரியில் தமிழ் வித்வான் வகுப்பைப் பலத்த எதிர்ப்புக்கிடையே நிலைபெறச் செய்தார். அவருக்கு அம் முயற்சியில் உற்ற துணைவராக இருந்தவர் கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு. த. வே. உமாமஹேஸ்வரம் பிள்ளை பி. ஏ., பி. எல். அவர்கள். இருவரும் அப்போது ஏற்பட்ட பார்ப்பனர் எதிர்ப்பைச் சமாளிக்க ஒரு வாரம் திருவையாற்றி லேயே தங்கி இருந்தனர். அக்கல்லூரியின் பெயரும் மாற் றப்பட்டது. இப்போது அஃது 'அரசரது இந்திய மொழிக் கல்லூரி'(Raja's College of Oriental Studies) எனப் படுகிறது. அக்கல்லூரி ஒன்றே சென்னைப் பல்கலைக் கழகத் துக்கு உட்பட்டது. சர். பன்னீர்செல்வம் இதனைச் செய் திராவிடின், நூற்றுக்கணக்கான கள்ளர்—மறவர் முதலிய தமிழ் வகுப்பினர் தமிழைக் கற்றிருத்தல் இயலாது! இய லாது!! இத்தகைய அரிய தமிழ்த் தொண்டினைச் செய்த வீரத் தமிழராகிய சர். பன்னீர்செல்வம் திருப்பெயர் ஒவ் வொரு தமிழர் உள்ளத் தாமரையிலும் பதிந்திருக்கத் தக்கது. அவர் திருப்பெயர் 'தமிழர் சரித்திரத்தில்' பொன் எழுத்துக் களில் பொறிக்கத் தக்கது. அப்பெரியார் வாழ்க!

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பாராட்டற்கு உரியது. அது, தமிழ்க் கல்லூரி வைத்துப் பல வித்துவான்களை உலகத்துக்கு அளித்துள்ளது. ஆயினும் உண்மைத் தமிழ்ப் பேராசிரியர்கள் அங்குக் குறைந்த தொகையினரே; "ஏதாவது ஒரு பிராக்ருத பாஷையிலிருந்து 'தமிழ் வந்தது' என்பதைக் காட்டி விட்டு இறந்தால், என் ஆத்மா சாந்தி அடையும்" என்று கூறி, இத்திருத்தொண்டிலேயே ஈடுபட்டுள்ள தமிழ் மஹா வித்வான்கள் சிலரும் அங்குண்டு. திரு. சோமசுந்தர பாரதியார் போன்ற வீரத் தமிழாசிரியரை அஃது இழந்தது அதன் போதாக்குறை என்று பன்முறையும் வருத்தத்தோடு பகர்வோம். ஆயினும், தமிழ்க் கல்லூரி வைத்துள்ள இராஜா சர். அண்ணாமலை செட்டியார் அவர்களைத் தமிழராய நாம் வாயார வாழ்த்துவோமாக! எனினும், வடமொழிக்கு அவர் அளிக்கும் போாக்கத்தை நினைந்து வருந்துவோமாக! அதற்கு அளிக்கும் பணத்தைத் தமிழுக்காகச் சிறப்பு வகையில் செலவிடுமாறு அவ்வண்ணலை வேண்டுகின்றோம்.

இங்ஙனம் தமிழ், பல்கலைக் கழகம் முதல் பாமரர் வீடு வரை அலங்கோலமாய்க் கிடக்கிறது. மறைமலை அடிகள், சோமசுந்தர பாரதியார் போன்ற இரண்டொருவர் மெய்யாகவே தமிழ்த் தொண்டு செய்கிறார்கள்; ஏனைப் புலவர் கால நிலை நோக்கி வருந்தி அடங்கிக் கிடக்கின்றனர். இந்நிலைமையில் தமிழ் வளர்கின்றதா? என்பதை எண்ணிப் பாருங்கள்.

இதுகாறும் கூறியவற்றால், வடமொழி ஒன்றினால் (அதுவும் கட்டாய பாடம் இல்லை) தமிழ்மொழி, தமிழர் மணம், பழக்கம், வழக்கம், நாகரிகம், சுய அறிவு இவை அனைத்தும் எத்துணை அழிந்துவிட்டன என்பதை அறிவுடைத் தமிழர் எளிதில் அறியக்கூடும். இவை அனைத்தையும் ஒழித்துத் தமிழை—தமிழ் நாகரிகத்தைப் பழைய நிலை

யில் வைக்க வேண்டுமாயின், என் செய்தல் வேண்டும்? என்னும் யோசனை உண்டாகும். கீழ்வரும் திட்டங்களை விடா முயற்சியுடன் செய்யின், நாம் தலை நிமிர வழியுண்டு:

## V. நாம் செய்ய வேண்டுவன

1. கட்டாய இந்தியைக் கட்டாயம் ஒழித்தே தீரல் வேண்டும்.
2. 'என் தாய்மொழி தமிழ்; அதுவே என் உயிர்நாடி; அதன் முன்னேற்றமே தமிழனாகிய எனது முன்னேற்றம்' என்பதை ஒவ்வொரு தமிழனும் காலை எழுந்தவுடன் எண்ணுதல் வேண்டும்.
3. கூடுமானவரை தூய தமிழிலேயே பேசுதல் வேண்டும்.
4. தினமும் கால்மணி நேரமாயினும் தமிழ் (அவரவர் அறிவுக்கும் தகுதிக்கும் தக்கபடி) வாசித்தல் வேண்டும்.
5. வீட்டில் நடைபெறும் 'மணம்' முதலியவற்றைத் தமிழ் முறையிலேயே செய்தல் வேண்டும்.
6. தமிழர் நெறிக்கு மாறான எதனையும் எக்காரணம் கொண்டும் செய்தல் ஆகாது.
7. தமிழ்ப் பாட்டுக் கச்சேரிகளையே ஆதரித்தல் வேண்டும்.
8. நல்ல தமிழ் அறிஞர் நடிக்கும் நாடகம், சினிமா இவற்றையே ஆதரித்தல் வேண்டும். கொச்சைத் தமிழ் நடிகர்களை ஆதரித்தல் கூடாது.
9. தமிழில் வெளியிடும் துண்டுத் தாள்கள் நல்ல இலக்கண முறையில் எழுதப்படல் வேண்டும்.
10. தெருக்களுக்கும் சோலைகட்கும் (Parks) தமிழ்ப் பெயர்களை இடச் செய்தல் வேண்டும்.
11. குழந்தைகட்குத் தமிழ்ப் பெயர்களையே இடுதல் வேண்டும்.

12. ஊர்தோறும் 'தமிழர் கழகம்' நிறுவித் தமிழர் ஒற்றுமையைப் பலப்படுத்தல் வேண்டும்.

13. தமிழர் கழக மூலமாகத் தமிழர் திருமணம், தமிழர் மதம், நாகரிகம் இவை பற்றிய சிறு நூல்களை வெளியிட்டுப் பரப்புதல் வேண்டும்.

14. தமிழறிவை, படியாதவர்க்கு ஊட்டுதல் வேண்டும்.

15. தமிழ் நாட்டு வறுமை நீங்கத் தமிழ் நாட்டுப் பொருள்களையே வாங்கித் தமிழ் மக்களை ஆதரித்தல் வேண்டும்.

16. திராவிடரை 'அசுரர், அரக்கர், குரங்குகள்' என்று இழித்துக் கூறும் இராமாயணத்தையும்[1], ஒருத்தி ஐவரை மணக்கும் அறமற்ற செயல் கூறும் பாரதத்தையும் காலசேஷபமாக நடத்தவிடல் கூடாது. அவற்றுக்குப் பதிலாகச் சிலப்பதிகாரம், மணிமேகலை, பெரியபுராணம் முதலியவற்றைத் தக்காரைக் கொண்டு காலசேஷபம் செய்வித்தல் வேண்டும். இவை போலத் தமிழ் வளரவும் தமிழர் வளர்ச்சியடையவும் ஆவன எல்லாம் செய்தல் வேண்டும்.

17. சாதி பேதங் கற்பிக்கும் ஹோட்டல் முதலியவற்றை அறவே வெறுத்து ஒதுக்குதல் வேண்டும்.

18. தமிழைத் தாழ்த்தி வடமொழியை உயர்த்திப் பேசுபவரைச் சமூகத்தில் வெறுத்து ஒதுக்குதல் வேண்டும்.

19. தமிழர் இயக்கத்தை இழித்துப் பேசும் தமிழ்ப் பத்திரிகைகளைத் தமிழர் ஒருமுகமாய் வெறுத்து ஒதுக்குதல் வேண்டும்.

---

1. Vide 'Jawahirlal's 'Letters to his Daughter' chap. 31, p. 84 para 6. (4th ed. 1937)

## VI. அரசியலார் செய்ய வேண்டுவன

1. இப்பொழுது பள்ளிகளில் தமிழ் கட்டாய பாடம் இல்லை. அதனைக் கட்டாய பாடமாகச் செய்தல் வேண்டும்.

2. அது முதல் நிலைக்குக் கொண்டுவரப்படல் வேண்டும். 'அதில் 100-க்கு 40 'மார்க்' வீதம் வாங்குவோரே தேர்ச்சிபெற்றவர் என்னும் விதி செய்தல் வேண்டும்.

3. தமிழாசிரியர்க்கு B. A., L. T-களுக்குக் கொடுக்கப் படும் சம்பளம் கொடுத்தல் வேண்டும்.

4. தமிழும் ஆங்கிலமும் வல்லாரைக் கொண்டு (இயன்ற வரை) எல்லாப் பாடங்களையும் தூய தமிழில் வெளி யிடச் செய்த பின்னரே, எல்லாப் பாடங்களையும் தமி ழிற் போதிக்க விதி செய்தல் வேண்டும்.

5. இருமொழி—மும்மொழிப் புலவர்களாய மறைமலையடி கள், சோமசுந்தர பாரதியார் எம். ஏ., பி. எல்., கா. சுப் பிரமணிய பிள்ளை எம். ஏ., எம். எல்., பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், திரு வி. கலியாண சுந்தரனார், டி. பி. மீனாக்ஷி சுந்தரனார் எம். ஏ., பி. எல்., எம். ஓ. எல்., உமா மஹேஸ்வரம் பிள்ளை பி. ஏ., பி. எல்., பண்டித ந. மு. வே. நாட்டாரர் போன்ற பெருமக்களைக் கல்விப் பிரிவினர் அழைத்து, 'நூல் இசைவுக் குழு'வில் சேர்த்தல் வேண்டும். அவர்தம் இசைவு பெறா நூலைப் பள்ளி களில் பாட நூலாக வைக்கவிடல் ஆகாது. அவர் களைப் பல்கலைக் கழகத் தமிழ்க் குழுவிலும் நியமித்துத் தமிழைப் பாதுகாத்தல் வேண்டும்.

6. வழக்கு இழந்த வடமொழியை அதன் இனமான ஹீப்ரு, லாட்டின் உள்ள இடமாகிய கல்லூரிகளிலேயே இருக்குமாறு கட்டளை இடல் வேண்டும். அதனை

உயர் கலாசாலைகளில் வைத்தல் தமிழுக்குத் தீமையே ஆகும்.

7. கிராமங்களில் அழுத்தமான முறையில் தமிழ்ப் பள்ளிகளை அமைத்தல் வேண்டும்.

8. ஜில்லாவுக்கொரு 'தமிழ்க் கல்லூரி' ஏற்படுத்தல் வேண்டும்.

9. உள்நாட்டு ஆட்சி மன்றங்கள் (ஜில்லா போர்டு—முனிசிபாலிடிகள்) தமிழிலேயே நடைபெறுதல் வேண்டும்.

இவையும் இவை போல்வன பிறவும் அரசியலார் செய்வாராயின் தமிழ், தன் பழைய நிலைமையை அடையும். இம்மாகாண முழு ஆட்சியின் நடவடிக்கையும் தமிழிலேயே நடைபெறல் வேண்டும். அன்றே தமிழ்நாடு பழந்தமிழ் நாடாகும். கொச்சைத் தமிழில் எச்சில் உமிழல் வேண்டும். தூய தமிழைப் போற்றுதல் வேண்டும். தெருவெல்லாம் தமிழ் முழக்கம் எழுதல் வேண்டும். யாண்டும் 'தமிழ், தமிழ்' என்னும் பெருமுழக்கம் ஓங்குதல் வேண்டும். அன்றே தமிழ் வாழும்! அன்றே தமிழ் நாடு தமிழர்க்கு உரியதாகும்!!

தமிழ் வாழ்க! தமிழர் வாழ்க!! தமிழ் நாடு வாழ்க!!!

## VII. தமிழர்க்கு இந்தி வேண்டுமா?*

[புதுவை. சுவாமி சுத்தானந்த பாரதியாரவர்கள்]

[இவர் 1936—ல் 'தமிழர்க்கு இந்தி கட்டாயமாக வேண்டுவதில்லை' என்று கட்டுரை ஒன்று தக்க காரணங் காட்டி வரைந்துள்ளார். இவரே இன்று கட்டாய பாடமாக்கியதை ஆதரித்து வாழ்த்துகிறார். இவ்வாறு காலத்துக் கொரு விதம் பேசும் இவர் போன்றாரைத் தமிழர் எங்ஙனம்

*Vide 'Senthamil Selvi' vol. 15. p. 205-207.

'நடுநிலையாளர்' எனக் கூறல் முடியும்? இவர் 1936—ல் எழுதிய கட்டுரையைக் கீழே தருகின்றோம். உள் உணர்வு (மனச்சாட்சி) வாய்ந்த தமிழ் மக்கள் நன்கு படித்து, இன்று கட்டாய இந்தியை ஆதரித்து நூலொன்று எழுதி யிருக்கும் இத்துறவியார் மனப்போக்கை மதிப்பிடுவாராக!]

"தமிழுக்கு வேண்டிய அருட்செல்வம் உள்ளது. தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி, திருப்புகழ், திருக்குறள், பெரிய புராணம் போன்ற அருள்வாக்குகள் மனிதவாழ்விற்குக் கடவுளொளி காட்டுவன. அவை தமிழருக்குப் போதும். அருங்கலைச் செல்வத்திற்கு மேனாட்டைத்தான் எதிர்பார்க்கும் நிலைமையில் இந்தியா உள்ளது. தாய்நாட்டின் அருட்செல்வமும் மேனாட்டின் பொருட்செல்வமும் சேர்ந்தே இனி நம்மை ஆளாக்கவேண்டும். இந்த இரண்டிற்கும் இந்தி எவ்வாறு பயன்படும் என்பதை அறிஞர் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இந்தியினின்று தமிழர் கற்றுப் பயனடையக் கூடியது ஒன்று உண்டு. அதாவது அம்மொழி எவ்வளவு ஆர்வமுடனும் ஆதரவுடனும் முன்னேறி வருகிறதோ அவ்வளவு ஆர்வமுடனும் ஆதரவுடனும் தமிழை முன்னேற்ற ஒவ்வொரு தமிழனும் விரதம் பூண்டு முயற்சி செய்வது. கோரக்பூர் கீதா அச்சுக்கூடம் செய்யும் வேலையைத் தமிழர் செய்தால், இந்தியாவிற்குத் தமிழையே தாய்மொழியாக்கலாம் என்பது கனவாகாது; உறுதியாக நடக்கும். தமிழுக்கு இயல்பாக அவ்வளவு பெருமையுள்ளது. அப்பெருமை தென் குமரிக்கும் வடவேங்கடத்திற்கும் இடையே சிறைப்பட்டுள்ளது. இனித்தான் விரிந்து உலகளாவவேண்டும். ஆங்கிலத்திற்கு அடுத்தபடியாக 30 எழுத்துக்களில் முற்ற முடிந்த ஓர் அரிய பெரிய தொன்மொழி தமிழே. அஃது இப்போது கால வெள்ளத்தில் வடக்கு, மேற்கிலிருந்து மோதும் அலைகளால் தத்தளித்துக்கொண்டிருக்கிறது. ஒவ்வொரு தமிழ

னின் கையும் தமிழ் முன்னேற்றத்திற்குக் கை தந்து, இப் பெரிய அரிய அருள்மொழியை அதற்குரிய அரியணையில் ஏற்றி இலங்கவைக்க வேண்டிய காலம் இது. இன்னும் ஐந் தாண்டுகளில் வீடுதோறும் தமிழ் மணம் கமழும்படி செய்ய வேண்டும். மேனாட்டிற்குப் பெருமை தரும் கலைகளெல்லாம் நம் தமிழர் நன்கு பயின்று அறிந்து பயன் பெறும்படி செய்ய வேண்டும். இன்றேல், மேற்சொன்ன அலைகள் மீண்டும் விழுங்கும்! தமிழா! விழித்தெழுக!

“இந்தியைவிட ஆங்கிலமே நமக்கு இப்போது இன்றி யமையாதது. ஆங்கிலத்தினால்தான் ஜப்பான் முன்னேறிப் பொருட் செல்வம் பொலிந்து விளங்குகிறது. வெறும் மொழிப் பயிற்சிகளிலேயே ஆயுள் வீணாகக்கூடாது. ஒவ் வொருவனும் தனது தாய்மொழியை நன்கு கற்கவேண்டும். உலகுடன் பழகுவதற்கும் தொழில் நடத்துவதற்கும் பெரும் பான்மையோர் உலகெங்கும் நன்கு அறிந்த ஒரு மொழியை யும் கற்றறியவேண்டும். அத்தகைய மொழி இப்போது ஆங் கிலமே என்பது யாவரும் ஒப்புக்கொள்ளத் தக்கதே. மக்க ளுக்கு வேண்டுவன இரண்டு: அருள், பொருள். அருட்செல் வம் தமிழில் மலிந்து கிடக்கிறது; உலகிற்கெல்லாம் வழங்க லாம். பொருட்செல்வத்திற்கு ஆங்கிலத்தின் அறிவுந் துணை யும் வேண்டும். ஆங்கிலத்தில் நமக்கெய்தும் பயனைத் தமிழுக்கே உரிமையாக்க வேண்டும். அத்தகைய முயற்சியால்தான் நாம் தலை நிமிரமுடியும். இந்தி காற்றினும் கடிய வேகத்துடன் முன்னேறி வருகிறது. கலைகளெல்லாம் இந்தியில் ஆக்கப் பட்டு வருகின்றன. புதிய புதிய நாவலர்களைக் கொண்டு புதுப்புது நூல்களை யாத்து அம்மொழியை நாட்டின் முதன் மொழியாக்க முயல்கின்றனர். அம்முயற்சி தமிழுக்குத் தமிழ் நாட்டில் நடைபெறவேண்டும். சைவ சித்தாந்தக் கழ

கம் ஒன்றுதான் இப்போது அத்தகைய பெருமுயற்சியில் தலையிட்டுச் சென்ற பல ஆண்டுகளாக மிகவும் அரிய பெரிய நூல்களை வெளியிட்டுக் குறைந்த விலைக்குக் கொடுத்துதவி வருகிறது. இத்தகைய முயற்சிகளைத் தமிழர் ஒருமித்து ஆதரிக்க வேண்டும். தமிழ் இப்போதிருக்கும் நிலைமையில் நமக்கு வேறு மொழிகளில் ஈடுபட நேரமில்லை. பிற மொழிகளை நாம் வெறுக்கவில்லை. அததனிடத்தில் அதது உயர்வே. அவரவர்க்கு அவரவர் தாய்மொழி உயிர். தமிழின் உயிரைக் காப்பாற்றும் பணி நமக்கு இப்போது வந்துள்ளது. பிற மொழிகளின் முன்னேற்றத்திற்குத் தக்கவாறு தமிழ் முன்னேறியாக வேண்டும். அதற்கு மாறாக, நம் பள்ளிச் சிறார், தமிழைப் புறக்கணித்து வேறொரு மொழிக்கு முதன்மை தரும்படியான எத்தகைய முயற்சியும் தமிழுக்கு ஆக்கந் தராது. தமிழ், இந்தி, ஆரியம், ஆங்கிலம், தெலுங்கு முதலியன அத்தனையும் கற்றால் நல்லதுதான். இன்னும் பல மொழிகளையும் கற்கலாம். ஆனால் நேரம்? நமக்கு வேண்டுவது எது? மொழிப் பயிற்சியின் நோக்கமென்ன? மனிதர் ஒருவரோடொருவர் கலந்து உறவாடிப் பயன் பெறுவதே. அதற்கு முதன்மையாகத் தாய்மொழி வேண்டும். அது நமது தாயகத்திற்கு ஒருமைப்பாட் டுணர்ச்சியைத் தரும். இரண்டாவது, உலகறிந்த ஒரு மொழி வேண்டும். தற்போது அத்தகைய மொழி ஆங்கிலம், பிரஞ்சு இரண்டும். எந்த நாட்டிற்குப் போனாலும் இந்த இருமொழிகளுக்கும் செல்வாக்கு உண்டு. இந்த இரண்டிலும் மேம்பட்டது ஆங்கிலமே. அதனால்தான் ராஜா ராம்மோகன் ராய் போன்ற பெரியார் பலர் நம் நாட்டிற்கு ஆங்கிலத்தின் முதன்மையை வற்புறுத்தினர். இன்று உலகிலுள்ள இலக்கியச் செல்வமெல்லாம், கலையறிவெல்லாம் ஒருங்கே ஆங்கிலத்தில் காணலாம்: ஒரு சிறு தீவினர் பேசும் அம்மொழிக்கு வந்த பெருமைதா

னென்னே! அதன் பெருமை அசைக்க முடியாதபடி மேன் மேலும் ஓங்கி வளருகிறது. ஆங்கிலத்தில் மொழிபெயர்த் ததனாலன்றோ தாகூரின் 'கீதாஞ்சலி' உலகப்பரிசு பெற்றது! விவேகானந்தர் சிகாகோ மேடையில் ஆங்கிலத்தில் பேசியதா லன்றோ இன்று நமது நாட்டு வேதாந்தம் கடல் கடந் தொலிக்கிறது! அது போலவே சித்தாந்தமும் கடல் கடந் தொலிக்கச் செய்யவேண்டும். தமிழ் உலகறிய விளங்க வேண்டுமாயின் ஆங்கிலத்துணை வேண்டும். மொத்தமாக எந்த இந்திய மொழிக்கும் தற்போது ஆங்கிலத்தின் துணை வேண்டும். வங்கமொழி ஆங்கிலத்தின் கூட்டுறவால் மிகவும் முன்னேறியுள்ளது. தமிழின் அருட்செல்வத்தை ஆங்கிலத் தில் ஆக்கி உலகெங்கும் பரப்பவேண்டும். ஆங்கிலத்திலுள்ள பொருட்செல்வத்தைத் தமிழாக்க வேண்டும். இந்த இரண்டு தான் தமிழருக்குப் பெருமை தரும். இந்தப் பணி நிறை வேறிய பிறகு தமிழர் எத்தனை மொழிகளை வேண்டுமானாலும் கற்கட்டும்.

"இந்தியை நாம் வெறுக்கவில்லை. கற்பவர் கற்கட்டும். கட்டாயப்படுத்த வேண்டாம். மாணவருக்குத் தமிழறிவு பாழ்படும்படியான போட்டி மொழிகளை முதன்மையாக்க வேண்டாம். இந்தி கற்றவரும் என்ன செய்யவேண்டும்? அம்மொழியிலுள்ள நயங்களைத் தமிழிற்கு உரிமையாக்க வேண்டும். அப்படித்தான் நமக்கு அருகேயுள்ள வடுகு முன் னேறி வருகிறது. எம்மொழியில் புதுமை காணினும் அதை உடனே தம்மதாக்கி வருகின்றனர் வடுகர். தற்போது தெலுங்குப் பேரகராதி ஒன்று தயாரிக்கின்றனர். அதில் வெறும் பேசும் மொழிகளேயன்றி உலகிலுள்ள பெரியார் வரலாறுகள், புதுமைகள், நாட்டு வரலாறுகளைப் படங்களு டன் அச்சிட்டு வருகின்றனர். தக்காரை அதற்குக் கட்டுரை எழுதச் சொல்லி ஆதரிக்கின்றனர். உதாரணமாக, உயி

ரெழுத்துத் தொடக்கத்தில் அரவிந்தர் வரலாற்றை இங்குக் கேட்டு ஐந்து பக்கம் படத்துடன் வெளியிட்டுள்ளனர். தமிழர் சுற்றிலும் உலகைப் பார்க்கவேண்டும்; பெருமுயற்சி செய்யவேண்டும்; அதற்குத் தக்காரை ஆதரிக்க வேண்டும்.

"எம்மொழி பயின்றாலும் அதன் நயத்தைத் தமிழாக்க வேண்டும். அப்துல் பாகர் என்ற தீர்க்கதரிசி, 'ஒவ்வொருவரும் தாய் மொழியும் உலகறிந்த ஒரு பொது மொழியும் கற்றால் போதும். பல மொழிப் பயிற்சியில் நேரம் போக்க வேண்டாம்' என்றார். மேனாட்டார் தமது தாய்மொழியுடன் 'எஸ்பிராண்டோ' என்னும் உலகப் பொதுமொழியையும் கற்கின்றனர். எஸ்பிராண்டோ மிகமிக எளிது. இலக்கணம் சுருக்கம். பத்தே விதிகள். ரஷியா, பிரான்ஸ், அமெரிக்கா, இங்கிலாந்து எங்கிலும் இப்போது எஸ்பிராண்டோ கற்கின்றனர்; பல மொழிகளின் தேவையின்றி இரு மொழிகளிலேயே உலகை யாளுகின்றனர். தாய்மொழி, பொது மொழி இரண்டு கற்றால் போதும் என்பது அறிஞர் கொள்கை. வடநாட்டிலேயே ஆரியம் மிகைபடக் கலந்த இந்திக்கும், அரபி, பார்சி மிகுந்த உருதுக்கும் போட்டியுள்ளது. ஆதலால், விருப்பமும் நேரமும் இருந்து கற்பவர் கற்கட்டும். அஃது அவரவர் மனப்பான்மை. ஒருவர் லத்தீன் கற்பேனென்று முனைந்தால் அவர்களைப் பிறர் தடுத்தல் பான்மையன்று. கற்பவர் கற்கட்டும். 'கட்டாயமாகக் கற்றே தீரவேண்டும்; இல்லேல் வாழ முடியாது' என்று தடபுடல் செய்யவேண்டாம். பள்ளிச்சிறார்க்குத் தமிழும் ஆங்கிலமும் மேன்மேலும் வளரும் நன்முயற்சிகளை இடையறாது செய்வோம். இதுதான் எமது விருப்பம். உள்ள மட்டும் தமிழ்க்கே உயிர்க்கிறேன்; பிற்காலத்திலாயினும் தமிழர் அதன் பயனைப் பெறுக."

The Guardian Press, 21, Anderson Street, Madras.